செப. அக' 92 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை: ரூ 2.50

www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE : FRANCE

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE : FRANCE



## அத்வைதமும் அர்ஷத் மேத்தாவும்

படிப்பகம்

www.padippakam.com

பெண் முதல்வர் ஆட்சியில் பெண் குழந்தை என்ற கொலை செய்தி வெளிவந்தால் அவமானமாகிவிடும் என்று கருதி அக்கருத்தரங்கப் பங்கேற்பாளர்களை சென்னைக் கோட்டைக்கு கடத்திக்கொண்டு வந்து ரகசியமாக கருத்தரங்கை நடத்திவிட்டது தமிழ்நாடு அரசு.

### மோசடிக்கு பரிகாரம் யாகம்!

லட்சக்கணக்கான கோடி ரூபாய் பங்குச் சந்தை - வங்கி மோசடியில் சிக்கிக் கொண்ட நிதி நிறுவனங்களில் பிரதானமானது இந்திய ரிசர்வ் வங்கி. இதற்கு முக்கியக்காரணம் அந்த வங்கியை அடிமுதல் முடிவரை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பார்ப்பன கும்பல். கொஞ்சமும் வெட்கமோ பதற்றமோ, பயமோ இல்லாமல் அது தனது சாதித்திமிரைக் காட்டும் இன்னொரு காரியத்தில் இறங்கிவிட்டது. அதாவது ரிசர்வ் வங்கிக்காரர்களுக்கு அடுத்தடுத்து ''துரதிருஷ்டம்'' நேருகிறதாம்; உள்ளேயும் வெளியேயும் பல விபத்துக்கள் நேர்ந்து நேற்றுவரை திடகாத்திரமாக இருந்த அலுவலர்கள் பலர் அகால மரணம் அடைகிறார்களாம். ஏதோ ''பீடை'' பிடித்துவிட்டதாம். அதைப் போக்க ஒரு பார்ப்பனப் பண்டாரத்திடம் ஆருடம் கேட்டு, சென்னை ரிசர்வ் வங்கி அலுவலகத்துக்குள்ளேயே ஒரு ''ஹோமம்'' நடத்த முடிவு செய்துள்ளது பார்ப்பன கும்பல். அதற்காக அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி அமைத்து அலுவலர்களை நிர்பந்தித்து நிதிவசூலிக்கிறது. தலைமை அதிகாரிகளுடன் ''இடது'' போலிக் கம்யூனிச தொழிற்சங்க தலைவர்களும் மறைமுக ஆதரவு அளித்துள்ளனர். வம்புவேண்டாம் என்று கிறித்தவர்களும் நிதி கொடுத்தனர். ஆனால் இசுலாமியர்கள் தாங்களும் தொழுகை நடத்துவோம் என்றும், சில பகுத்தறிவாளர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டவும் விசயம் வெளியே வந்துவிட்டது. 75 சதவீத ஆதரவு இருக்கிறது. நடத்தியே தீருவோம் என்று பிடிவாதம் பிடிக்கிறது பார்ப்பன கும்பல். ரிசர்வ் வங்கி அதீத பாதுகாப்புப் பிரதேசம் என்று அறிவித்திருப்பதையோ, ''மதச் சார்பற்ற அரசு அலுவலக''த்துக்குள் இந்து மத ஹோமம் நடத்துவது குற்றம் என்றோ அது ஏற்கவில்லை. நிலைபெற்றுள்ளது பார்ப்பன - பாசிச ஆதிக்கம் என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்?

### இங்கிலாந்து சிறையிலும் இனவெறி

பிரிட்டனில் குடியேறியுள்ள வெளிநாட்டு சிறுபான்மை இனமக்களின் தொகையோ ஐந்து சதவிகிதம். ஆனால் பிரிட்டனின் சிறையில் உள்ள ஆண் கைதிகளில் 14 சதவிகிதமும், பெண் கைதிகளில் 23 சதவிகிதமும் இந்த வெளிநாட்டு சிறுபான்மை இனத்தவர்கள். அதிலும் குறிப்பாக ஆசியக் கண்டத்தவர்கள்தாம் அதிகம். கொலைகள், போதை மருந்துக் கடத்தல் செய்தவர்கள் முதல் சாதாரண சிவில் சட்ட மீறல் குற்றங்களுக்கு அபராதத்தொகை கட்டமுடியாதவர்கள் வரை பலரும் சிறையில் அடைபட்டுள்ளனர். பெரும்பாலும் குடும்ப நெருக்கடிகளே பல குற்றங்களுக்குக் காரணங்கள். சிறைச்சாலைகளிலோ நமது நாட்டில் இருப்பதைப்போலவே கழிப்பறை வசதிகள் கூடக் கிடையாது. சிறைக் கொடுமைகள் காரணமாக கடந்த ஆண்டு மட்டும் 50 பேர் தற்கொலை செய்து கொண்டார்கள். அதுவும் இனரீதியில் பழிவாங்கப்படுவது அதிகம். பிரிட்டனின் சிறையில் உள்ள ''ஒரே சலுகை'' கைதிகள், தாம் அடைக்கப்படும் கொட்டடியைத் தெரிவு செய்துகொள்ள உரிமை உண்டு என்பதுதான். வெள்ளை நிற இன வெறிக் கைதிகளின் கொலைகாரத் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காகப் பிற நிற-இனக் கைதிகள் தமது நிற இனத்தவர் உள்ள கொட்டடிகளில் சிறையிருக்கவே அதிகம் விரும்புகின்றனர். இதையும் நிற-இனவெறி அதிகாரிகள் தடுத்துப் பழிவாங்கவே செய்கிறார்கள்.



ரிசர்வ் வங்கிப் பார்ப்பனரின் வேள்விக்கெதிராக தி.க.ஆர்ப்பாட்டம்

### செருப்பு யாத்திரை!

செங்கல் பூசை, ரதயாத்திரைகள் ராமர் ஜோதி ''அஸ்திகலச'' யாத்திரை என்று நடத்தி இந்து மதவெறியைத் தூண்டி தேர்தல் ஆதாயம் காண்பதிலும் சிறுபான்மையினரைப் படுகொலைகள் செய்வதிலும் ருசி கண்டுவிட்டது ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிசத் கும்பல்.

இப்போது தனது இயக்கத்தில் நிலவி வரும் தொய்வைப் போக்கவும், உள்தகராறுகளைத் திசைதிருப்பவும் ஒரு புதிய உத்தியை வகுத்துள்ளது. அதன்படி ராமன் காட்டுக்குப் போகும்போது பரதனிடம் தனது பாதுகை - (செருப்பைக்) கொடுத்த இடம் என்று ஒரு ஆலமரத்தைக் 'கண்டுபிடித்துள்ளார்கள்' இந்த மோசடிப் பேர்வழிகள். அந்த இடத்தில் பத்துவேத பண்டிதர்களை வைத்து செருப்புபூசை நடத்தியுள்ளார்கள். இதற்காக 400 மூட்டை செருப்புகள் தயாரித்து, பூசையில் வைத்துப் புனிதம் பெற்றவை என்று கதை கட்டி, அவற்றை நாடு முழுவதும் உள்ள 5 லட்சம் கிராமங்களுக்கு யாத்திரையாக எடுத்துச் செல்லவும், ஆங்காங்கே பூசைகள் நடத்தவும் திட்டமிட்டுத் துவங்கிவிட்டனர்.

இதன் மூலம் அயோத்தியில் ராமன் கோவில் கட்டும் இயக்கத்துக்கு எழுச்சியூட்டப் போகிறார்கள். இதற்கு முன்பு நடந்ததைப்போல செருப்பு யாத்திரை போகும் இடமெல்லாம் மதவெறிப் படுகொலைகள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

### ஜெயவர்த்தனேவின் தில்லுமுல்லு

சிங்கள இனவெறியன் பாசிஸ்ட் ஜெயவர்த்தனே, ''மனிதர்களும் நினைவுகளும்'' என்றொரு நூல் எழுதியுள்ளான். இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி ஒரு தனி அத்தியாயம் அதில் வருகிறது. அதற்காகவே பலரும் அந்நூலை வாங்கினர்; பத்திரிக்கைகள் அதன் சுருக்கத்தை வெளியிட்டுப் பாராட்டின. ஆனால் அந்த அத்தியாயம் முழுக்கவும் அப்படியே காப்பியடிக்கப்பட்டவை என்று இப்போது தெரிகிறது. ''மரபின ஆய்வுகளுக்கான சர்வதேச மையம்'' என்கிற கொழும்பு அமைப்பு முன்பு ஏற்பாடு செய்திருந்த ஒரு கருத்தரங்கில் பிரபல ஆய்வாளர் டாக்டர் கே.எம்.டி-சில்வா மூன்று கட்டுரைகள் வாசித்தார். ''1987 ஜூலை இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு முன்னோட்டம்'' என்கிற ஒரு கட்டுரையில் டி-சில்வா எழுதியுள்ள பக்கங்களைத்தான் ஜெயவர்த்தனே அப்படி அப்படியே காப்பியடித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 10
● குரல்: 4, 5
● செப், அக். '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டுச் சந்தா: ரூ.30

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US $ 8

*படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:*

*ஆர்.சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.*

# தன்னுரிமைக்கெதிரான தாக்குதலை முறியடிப்போம்!

பாட்டாளி மக்கள் கட்சியும், தமிழ் இன உரிமை கோரும் பிற குழுக்களும் நடத்திய தமிழர் வாழ்வுரிமை மாநாட்டையும் பேரணியையும் தொடர்ந்து, ஆளும் பாசிச அ.தி.மு.க. - காங்கிரசும், பாரதீய ஜனதாவும், அவர்களின் ஊதுகுழல்களான பத்திரிக்கைகளும் வானொலி - வானொளியும் ''பா.ம.க.-வைத் தடை செய்ய வேண்டும்'' என்ற பெருங்கூச்சலைக் கிளப்பியுள் ளன. தன்னுரிமை கோருவதும், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஆதரிப்பதும் பிரிவி னைவாதம், தீவிரவாதம், தேச துரோகம் என்று பார்ப்பன - பாசிச கும்பல் பிரச்சாரம் செய்கிறது. தேச துரோக குற்றஞ்சாட்டி பா.ம.க. மற்றும் பிற தமிழ் இனக்குழுத் தலைவர்களைச் சிறையில் அடைக்கும் முயற்சி இக்கும்பலின் சொந்தக் கையாலாகாத்தனத்தாலும் பா.ம.க. தொண்டர்களின் கடும் எதர்ப்பினாலும் முறியடிக்கப்பட்டுவிட்டது. இவற்றால் பார்ப்பன - பாசிச கும்பலின் ஆத்திரமும், பழிவாங்கும் உணர்வும் அதிகரித்து இருக்கிறது.

எனவே தகுந்த தயாரிப்புடன் மீண்டும் தாக்குதலைத் தொடுக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. பிரிவினைவாத - பயங்கரவாத எதிர்ப்பு தேசபக்த நாடகமாடி ஆதாயம் தேடுவது பார்ப்பன - பாசிச கும்பலின் வழக்கமான அரசியல் ஆயுதமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஆளும் ஜெயாவின் குடும்பத் தகராறு, உட்கட்சி நெருக்கடி, ஜெயாவுக்கு மூக்கணாங்கயிறு மாட்டி வீட்டுப்பசுவாக வைப்பதற்காக காங்கிரசு செய்யும் ஆட்சிக் கவிழ்ப்பு மிரட்டல்கள், ஜெயாவின் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள், நிர்வாகச் சீர்குலைவுகள் ஆகியவற்றால் மங்கிவரும் கவர்ச்சிக்கு ஈடுகட்ட ஆபாச - அவதூறு சதிராட்டம் தேவையாக இருக்கிறது.

எவ்வாறாயினும் பிரிவினைவாதப் பீதிகிளப்பி பஞ்சாப் போன்றதொரு நிலையை உரு வாக்கி அரசு பயங்கரவாத ஆட்சியை நிறுவுவது என்று ஆளும் பாசிச கும்பல் முடிவு செய்துவிட் டது. ஆனால் எவ்வளவு கொடிய அடக்குமுறையாலும் தன்னுரிமை வேட்கையை ஒழித்துவிட முடியாது. அது வெட்டவெட்டத் தழைக்கும். ஏனெனில் - தன்னுரிமை, ஓர் அடிப்படை ஜனநாயக உரிமை. அதுமட்டுமல்ல. மொழி, இன உரிமைக்கான போராட்டத்தில் தமிழர்கள் அளப்பரிய தியாகங்கள் புரிந்துள்ள வரலாறு படைத்தவர்கள். ஆகவே தமிழினத்தை நீண்டகாலம் அடக்கி ஆண்டு வரலாம் என்கிற பார்ப்பன - பாசிசக் கனவு பலிக்காது.

அதேசமயம் தமிழர் தன்னுரிமைப் போராட்டம் இதுவரை அதற்குத் தலைமையேற்றவர்க ளின் துரோகங்களையும், பின்னடைவுகளையும் சந்தித்திருக்கிறது என்கிற உண்மையைச் சொல்லி எச்சரிக்க வேண்டியுமிருக்கிறது. பார்ப்பன - பாசிசத்திற்கு எதிராகவும் தன்னுரிமைக் கோரிக்கைக் காகவும் எவ்வித சமரசமும் இல்லாமல் போராடுபவர்கள், அதற்காக ஏவிவிடப்பட்ட முதல் தாக்குதலுக்கும் நிலைகுலையாது நின்றவர்கள் என்கிற முறையில் இதைச் சொல்லும் உரிமையும், எச்சரிக்கவேண்டிய கடமையும் உடையவர்கள் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள்.

முதலாவதாக, பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் பிற தமிழின உரிமைக் குழுக்களின் தலைமை யினர் தமிழர் தன்னுரிமைக் கோரிக்கையை ஆரம்ப, அடிப்படை இலட்சியமாகக் கொண்டவர்கள் இல்லை. சாதி அரசியல், போலிக் கம்யூனிசம், காமராஜ் - காந்தீய ஜனநாயக சோசலிசம் போன்ற அரசியல் சரக்குகளை வியாபாரம் செய்வதில் தோல்வி கண்டு தன்னுரிமை முழக்கத்தில் தஞ்சம் அடைந்தவர்கள். இரண்டாவதாக, இந்தத் தலைமை திராவிட இயக்கத்தின் போக்கிலேயே - பாணியிலேயே தனிநபர் ஆதிக்கம், தனிநபர் வழிபாடு, ஜனநாயக மறுப்பு, நியமனப் பதவி, கவர்ச்சி - விளம்பர அரசியல் உத்தி போன்றவற்றைப் பின்பற்றி மக்கள் ஆதரவைத் திரட்ட முயலுகிறது. ஆகவேதான் காஷ்மீர், அசாம் போன்ற தேசிய இனப்போராட்டங்களில் காணும் மக்கள் எழுச்சியை இதனால் உருவாக்க முடியவில்லை. குழு - கட்சி சார்ந்த முன்னோடிகளின் இயக்கமாகவே அது நீடிக்கிறது.

மூன்றாவதாக, தமிழர் தன்னுரிமை இயக்கம் வெறும் பார்ப்பன ஆதிக்கத்தை மட்டுமல்ல, அதன் பாசிசத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. ஆனால் தேர்தல் அரசியல் வரம்புக ளுக்குள் நின்று போராடி வெற்றிபெறுவது என்பது சாத்தியமே இல்லை. நான்காவதாக, மிகமுக்கி யமாக, சாதியத்துக்கும் நிலவுடமைக்கும் எதிரான போராட்டத்தோடும், மக்களுக்கு அதிகாரம் என்கிற நோக்கத்தோடும் இணையாத போராட்டத்தை நடத்தத்தான் இந்தத் தலைமை தயாராக உள்ளது. நிலவுடமை ஆதிக்கத்திற்கு, குறிப்பாகச் சொல்வதென்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக பேச்சளவில் இன்றி நடைமுறையில் போராடத் தயங்கும், தவறும் எந்த இயக்கமும் இன உரிமைக் கோரிக்கையின் கீழ் அவர்களைத் திரட்ட முடியாது. எழுபதாண்டுகால தமிழின உரிமைப் போராட்டத்தின் அனுபவமும் எதிர்மறையில் இதையே நிருபித்துள்ளது. எத்தகைய ஆய்வுக் கண்ணோட்டமுமின்றி, பா.ம.க. மற்றும் பிற குழுக்களின் இன்றைய ,இன உரிமை முழக்கங்களிலேயே மயங்கிப் பின் தொடர்பவர்கள் யாராயினும் அவர் கள் இந்தப் பாடத்தை மீண்டும் கற்க வேண்டியிருக்கும். ஆகவே பா.ம.க. மற்றும் பிற தமிழினக் குழுக்களின் தலைமை குறித்த நமது இந்த எச்சரிக்கையுணர்வு, தன்னுரிமைக்கெதிரான பார்ப்பன - பாசிசக் கும்பலின் தாக்குதலைச் சந்திப்பதற்கும், முறியடிப்பதற்கும் முரணானதல்ல; மாறாக அவசியமானது.

பா.ம.க மற்றும் பிற தமிழினக் குழுக்களிடம் இத்தகைய தவறான, சமரச, ஊசலாட்டப் போக்குகள் இருப்பினும், அவர்களோடு பல கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இருப்பி னும், அவர்களுக்கு எதிரான பார்ப்பன - பாசிச கும்பலின் தாக்குதலை புரட்சியாளர்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதை எதிர்த்து முறியடிப்பதற்கான போராட்டத்தைத் தொடர்வோம்.

- தவறுதலாக [illegible] 23ம் பக்கத்தில் அச்சாகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# அத்வைதமும் அர்ஷத் மேத்தாவும்

வட விருட்சத்தின் நிழலில்
வேதங்களின் மறைபொருளை
விரல் நுனியில் காட்டியபடி
வீற்றிருந்தான் சங்கரன்-
ஆதி சங்கரன்

பிறவிப் பெருங்கடல் நீந்தி
பிறவாமைப் பேறுபெற,
சத்தியம் உணர்ந்து
முக்தி நிலை பெற - முனைந்த
சீடன் கேட்டான்:

''ஸ்வாமி...!
நான் யார்? அது எது?''

மோனம் கலைந்த
முனிவன் சொன்னான்:

''இரண்டில்லை,
அ-த்வைதம்''

''அர்த்தமாகவில்லை ஸ்வாமி''

மோகனச் சிரிப்புடன்
சங்கரன் தொடர்ந்தான்:

''அகம் பிரம்மாஸ்மி
நானே அதுவாக இருக்கிறேன்
நான் உருவமில்லாதவன்
நான் எங்குமிருப்பவன்
நான் தளைகள் அறுத்தவன்
நான் சுதந்திரமானவன்
நானே பிரம்மம்
நானே சத்யம்''
நானே பங்கு மார்க்கெட்!

●

''அதென்ன சார்
பங்கு மார்க்கெட் ஊழல்?''

தம்பி...
ஊழலே பங்குச் சந்தை
பங்குச் சந்தையே ஊழல்.

''புரியலியே''

புரியாது.
உனக்குப் புரிவதற்காக
உண்டாக்கப்பட்டதல்ல
பங்குச் சந்தை.

கதைகேட்டு கதைகேட்டு
கனவில் வளர்ந்த / அழிந்த தேசமே
நானும் ஒரு கதை சொல்வேன்-
கேள்!

ஒரு ஊரில்
ஒரு கணவன்.
மனைவியையும் கூட்டிக்கொடுக்கும்
கணவன்

ஒருநாள்
வாடிக்கைக் காரனொருவன்
அந்தப் பெண்ணோடு இருப்பதை
பண்பாடில்லாத
ஒரு வழிப்போக்கன்
பார்த்துவிட்டான்...

''அப்புறம்''

அநியாயம்... அநியாயம் - என்று
கத்தினான்.
''புத்திசாலி'' புருசன்காரனும்
அவன்கூடவே சேர்ந்து கத்தினான்.

சிக்கிக் கொண்ட வாடிக்கையாளன்
ஹர்ஷத் மேத்தா.

''புருசன்காரன்?''

ஒரு பெயராயிருந்தால்
சொல்வது சுலபம்
அவனுக்கு ஆயிரம் நாமங்கள்
கிருஷ்ணமூர்த்தி, சிதம்பரம்,
வெங்கடரமணன், சீதாராமன்,
கீதகிருஷ்ணன்...

''சரி, வுடுங்க சார்...
ஏதோ ஊழல்...
ஒன்னும் புரியல
நமக்கு சம்பந்தமில்லை''

சம்பந்தமில்லை!
கோடிக்கு எத்தனை பூச்சியம்
என்று புரியாத
அறுபது கோடியே,
உனக்கு சம்பந்தமில்லை.

திருடனுக்கு
ஊதுபத்தி கொளுத்தவும்
வேசைக்கு மகுடம் சூட்டவும்
புரிந்த
ஓட்டு வங்கியே,
உனக்கு சம்பந்தமில்லை.



கீத கிருஷ்ணன்

சிந்திக்காதபோது
புரிந்து கொள்ளும் தேசம்.
புரியாதபோது
சிந்திக்கச் சுணங்கும் தேசம்.

ஆதிசங்கரனே!
இதோ...
நீ காணவிரும்பிய தேசம்.

தம்மின் மெலியாரை
(மெலியாரை மட்டுமே)
தாம் நோக்கித்
தம் நிலைமை
அம்மா பெரிதென்று
அகமகிழும் தேசம்-
கர்மயோகிகளின் தேசம்.

ஊண் இழந்தும்
உடுக்கை அவிழ்ந்தும்
உறக்கம் கலையாத தேசம்-
ஞான யோகிகளின் தேசம்.

இந்த
பண்பாடற்ற விதண்டாவாதி
வழிப்போக்கனை மட்டும்
ஒழித்து விட்டால்...

●

என்னே விதியின் விளையாட்டு!

அல்லாடி
ஆச்சாரியார்
சர்.சி.பி.ராமசாமி அய்யர்
ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி...
என்று நெஞ்சை விடைத்த
அக்கிரகாரமே,

அய்யர், அய்யங்கார்
ஆச்சாரியார்
முதலியார்
செட்டியார் - என்று
கம்பீரமாக
வாலை அசைத்த கூட்டமே
எங்கே இப்போது
வாலைக் காணோம்?

ரிசர்வ் வங்கி கவர்னர்
வெங்கட ரமணன் (அய்யர்)
நிதித்துறைச் செயலர்
கீத கிருஷ்ணன் (அய்யர்)
அட்டர்னி ஜெனரல்
ராமசாமி (அய்யர்)
யூ.கோ. வங்கித் தலைவர்
மார்க்க பந்து (முதலியார்)
திட்டக்குழு உறுப்பினர்
கிருஷ்ணமூர்த்தி (அய்யர்)
அமைச்சர்
ப.சிதம்பரம் (செட்டியார்)
ஸ்டேட் வங்கி
சீதாராமன் (அய்யர்)

வாலறுத்த நரிகளே
இதென்ன அஞ்ஞாதவாசம்?
காலதேச வர்த்தமானம்
சரியில்லையோ?

இட ஒதுக்கீட்டு ராகுவை
விழுங்கிய உங்கள்
அனல் கக்கும் நிலவுகள் எங்கே?

இட ஒதுக்கீட்டை
குழாய்த் தண்ணீரில் மூழ்கடித்த
சுஜாதா அவர்களே,
உழைப்பால் உயர்ந்த உத்தமர்
கிருஷ்ணமூர்த்தி அய்யரைப்பற்றி
'கணையாழி'யின்



படிப்பகம்

www.padippakam.com

கடைசிப் பக்கத்திலாவது
நாலு 'நறுக்'கெழுத்து
எழுதக்கூடாதா?

முதலியார் கண்ணீர் வடித்த
சிந்தனை சந்தர்,
சினா தானா
தென்னைமரமேறிய கதையை
நாலுரீல் சுற்றலாமே!

ஏன் இந்த மயான அமைதி?
நேற்று முன்தினம் வரை
'திறமை'யான ஜனாதிபதிக்காக
வாதாடிய உங்கள்
தர்க்கசாஸ்திர சிரோன்மணிகள்
எங்கே?

மண்டலாசுரனை வீழ்த்திய
பிரம்மாஸ்திரம்
பூமராங்காய்த் திரும்பிப்பாய்கிறதோ!

புரிகிறது.
தர்க்க சாத்திரத்தில்
தோல்வி கண்டவர்கள்
தர்ம சாத்திரத்தில்
தஞ்சம் புகுந்துவிட்டீர்கள்.
இதுவல்லவோ
சங்கரன் வகுத்த வழி!

சட்டப் பிரிவு - 8 உட்பிரிவு - 9ன்படி[2]
ஒழுக்க சீலர்களை
விசாரிக்கும் அதிகாரம்
ஒழுக்க சீலர்களுக்கு மட்டுமே
உரியது.

கிருஷ்ணமூர்த்தி அய்யரை
மணிசங்கர் அய்யர்
விசாரிக்கட்டும்

வெங்கட்ரமணய்யரின்
தவறுகளை
ஜானகிராமய்யர் ஆராயட்டும்

ஜானகிராமய்யரின்
நடத்தைக்கு
நரசிம்மராவ்
(சந்தேகம் வேண்டாம் - நம்மவர்தான்)
உத்திரவாத மளிக்கட்டும்.

நரசிம்மராவின் யோக்யதைக்கு
எல்லாம் வல்ல இறைவன்
(அல்லது ஜார்ஜ் புஷ்)
சான்று பகரட்டும்!

●

"சட்டத்தின் ஓட்டைகளை
ஹர்ஷத் மேத்தா
திறமையாகப்
பயன்படுத்திக் கொண்டார்
அவ்வளவுதான்" -
ராம் ஜேத்மலானி

ஓட்டை...!
பெருச்சாளிகளும்
பன்றிகளும் மட்டுமே
தப்பவியலும்
பிரம்மாண்டமான ஓட்டை.

ஆனால்
எலிகள் எலிகள் மட்டும்
என்றுமே தப்பவியலாத ஓட்டை!

பௌதிக விதிகளை மறுக்கும்
இந்த தெய்வீக ஓட்டைகளை
சிருஷ்டித்தவன் யார்?

மயனா
பிரம்மனா

அத்வைதிகளே!
உங்கள் திறமை
வேசியின் திறமையை
ஒத்திருப்பதை
நீங்கள்
கவனிக்கவில்லையா.

பரந்தாமனா
அல்லாடியா அல்லது
ஆனந்த பவனத்து
குற்ற பரம்பரையா?

கன்னம் வைப்பதும்
திறமையென்றால்...
நீங்கள் திறமைசாலிகளே.

சட்டப் பிரிவு 10 உட்பிரிவு 84-ன்படி[3]
இரும்பினால் செய்த
கலப்பையைத்தான்
பிராமணன் தொடக்கூடாது
கன்னக் கோலுக்கு
தோஷமில்லை.

மிருச்சகடிகத்தின்
பார்ப்பனத் திருடன் கூறியதுபோல்[4]
பூணூலும்
கன்னக்கோல் சுற்றும்
ஓர் ஆயுதமே.

எது திறமை
எது திருட்டு
என்ன வேறுபாடு?

அ-த்வைதம்!

துவாபர யுகத்தின் திருட்டு
கலியுகத்தில் திறமை

துவாபர யுகத்திலேயே
சகுனியின் நயவஞ்சகம்-
கண்ணனுக்கு லீலாவிநோதம்.

துச்சாதனின் துகிலுரிதல்-
துவாரகா பாலனின் ராசலீலை.

ஆனந்த விகடனின்
கேலிச்சித்திரத் திருடர்கள்
கிருஷ்ணமூர்த்தி அய்யரை
ஒத்திருந்ததுண்டா?



கிருஷ்ணமூர்த்தி

கேடி கந்தன்
பிளேடு பக்கிரி
பத்மவிபூஷன் கிருஷ்ணமூர்த்தி

ஆதி சங்கரனிடம்
நீதி கேட்டுப் பார்ப்போம்.

சாமி!
எது திறமை? எது திருட்டு?

"அத்வைதம்-
கயிற்றரவம்."

விளங்கலையே சாமி.

"மூடனே கேள்
பகலில் கயிறு
இரவிலே பாம்பு
உன் பார்வையில்தான் பேதம்"

ஆதி சங்கரன்
குழப்புகிறான்
மணி சங்கரனை (ஐயர்)
கேட்போம்.

"கிருஷ்ணமூர்த்தி என் நண்பர்
அவர் குற்றவாளி அல்லர்
குற்றம் சாட்டப்பட்டவர்
அவ்வளவுதான்.நண்பனும் நானே
நீதிபதியும் நானே"

பகலில் நீதிபதி
இரவில் நண்பன்
அத்வைதம்!

●

திறமையே திருட்டு
திருட்டே திறமை
அத்வைதம்!

அற்புதம்!
யுக யுகாந்திரங்களாய்
பாரதத்தை இணைத்து நிற்கும்
அந்தப் பண்பாட்டு இழையை,

பாரத மக்களின்
கழுத்தைச் சுற்றிப் பின்னியிருக்கும்
ஹிந்து தர்மம் எனும்
சுருக்குக் கயிற்றை
(மீண்டும் அத்வைதம்!)
கண்டு கொண்டோம்.

என்ன ஒற்றுமை!
தத்துவ சாத்திரம்
தவிடு பொடியானவுடன்
தரும (மனு) சாத்திரத்தில்
சரண்புகுந்தான்
அந்த சங்கரன்

"நண்பனே நீதிபதியா?" என்று
ஒழுக்க மரபுகளை
கட்டிக் காட்டினால்
குற்றவியல் சட்டத்தில்
ஒளிகிறான்
இந்த சங்கரன்.

ஒழுக்க சாரதிகளே,
முகத்தில் உதித்த
முதல் வருணத்தோரே,
என்னே உங்கள் அவலம்!

சமூகத்தின்
முகத்தில் விழிக்க அஞ்சி
சட்டத்தின்
பிட்டத்திற்குப்பின்னே
பதுங்குகிறான் உங்கள் சங்கரன்

குற்றவுணர்வுக்குப் பதில்
சட்ட உணர்வு.

படிப்பகம்

www.padippakam.com

சட்டம்!
நீங்கள் வகுத்த சட்டம்.
ஒழுக்கம் ஓரடி பாயுமுன்
பாதாளம் நோக்கி
பதினாறடி பாயும் சட்டம்.

சீரழிவுத் தொடர் ஓட்டத்தில்
ஒழுக்கத்தின் கையிலிருந்து
கட்டையைப் பறித்துக் கொண்டு
பாய்ந்தோடக்
கால்துடிக்கும் சட்டம்.

"குற்றம் சாட்டுபவன்தான்
நிரூபிக்க வேண்டும்-
குற்றம் சாட்டப்பட்டவன்
தன்னை நிரபராதியென
நிரூபித்துக்கொள்ள வேண்டுமென்றால்
அது பாசிசம்"-
மணிசங்கர் அய்யர்.

ஆகா!
அப்பழுக்கற்று ஜொலிக்கும்
இந்த
தூய ஜனநாயகத்தின் ஒளி,
பகல்பூரிலும், வாரணாசியிலும்
காஷ்மீரிலும், பஞ்சாபிலும்
அஸ்ஸாமிலும், தமிழகத்திலும்
... அண்ணாமலை நகரிலும்
படாமல் போனது ஏன்
சாத்தானே?
மன்னிக்கவும்.
தேவரே! பூதேவரே!

சட்டத்தின் முன்
அனைவரும் சமம்
கிருஷ்ணமூர்த்தி அய்யர்
கொஞ்சம் அதிகமாக சமம்.

சம்புகனுக்கு சிரச்சேதம்
அஜமிலனுக்கு சொர்க்கம்[6]

தென்னை மரத்தில்
புல் பிடுங்க ஏறிய
சிதம்பரம் செட்டியார்
இறங்கி விட்டார்.
வெற்றி...! வெற்றி...!
நல்லொழுக்கத்திற்கு வெற்றி!

"என்னுடைய மந்திரிகளை
யாரேனும்
தென்னை மரத்தின் உச்சியில்
கண்டால் சொல்லுமய்யா
இறக்கி விட்டு விடுகிறேன்"-
கர்ஜிக்கிறார் நரசிம்மராவ்

"அபாரம்! என்ன துணிச்சல்!
என்ன கண்டிப்பு!"-
புல் அரிக்கிறது தினமணிக்கு.

ஏறிய குற்றத்திற்கு
இறங்குவதே தண்டனை!

எப்படியும் நாம்
சட்டப் பிரிவு - 8 உட்பிரிவு-380ஐ
மீற இயலாது.[8]

●

"யார் செய்யவில்லை?
நான் மட்டுமென்ன
பலிகடாவா?"-
ஹர்ஷத் மேத்தா

அப்படிப் போடு!
யார் செய்யவில்லை?

ஆட்டுப் பாலை
பிர்லா மாளிகையில் அமர்ந்து



வெங்கிடரமணன்

பருக நேரிட்டதையும்,

வேர்க்கடலையை
பஜாஜ் வீட்டிலிருந்தபடி
(மாட்டுக் கொட்டிலாகத்தான் இருக்கட்டுமே)
கொறிக்க நேர்ந்ததையும் பற்றி

மகாத்மாவை
யாரேனும்
கேள்விக்குள்ளாக்கியதுண்டா?

அவரது
பிரம்மசரிய சோதனை பற்றி
குறைந்த பட்சம்
குமுதம் 'லைட்ஸ் ஆன்' பகுதியில்
ஒரு வரி
கிசுகிசு செய்தியாவது உண்டா?

தாத்தாவுக்கு ஒரு நீதி
பேரன்
மேத்தாவுக்கு ஒரு நீதியா?

அல்லது
பிரம்ம சூத்திரத்திற்கு
பாஷ்யம் எழுதிய
திருக்கரத்தால்
சௌந்தரிய லஹரியும்
கனகதாரா ஸ்தோத்திரமும்[7]
எழுதியதற்காக
ஆதி சங்கரனைக்
குற்றம் சொல்வார்தான் உண்டா?

அன்று முதல்
இன்று வரை
சத்திய சோதனையில்
விஞ்சி நிற்பது
வியவகாரிக சத்யம்தானே!

●

ஓட்டை...!
பெருச்சாளிகளும்
பன்றிகளும் மட்டுமே
தப்பவியலும்
பிரம்மாண்டமான ஓட்டை!
எலிகள்
தப்பவியலாத ஓட்டை
பௌதிக
விதிகளை மறுக்கும்
இந்த
தெய்வீக ஓட்டைகளை
சிருஷ்டித்தவன் யார்?

"இது நம்
அமைப்பு முறையின் தோல்வி
நாம் எல்லோருமே பொறுப்பு"
— மன்மோகன் சிங்

எதிர்மறைகளின்
ஒற்றுமை குறித்த
இயங்கியல் விளக்கத்தை
இதை விடத் துல்லியமாக
யாரால் விளக்க முடியும்?

பறிகொடுத்தவனின் குற்றம்-
அஜாக்கிரதை

பறித்தெடுத்தவனின் குற்றம்-
திருட்டு

இருவருமே தவறிழைத்துள்ளனர்.
மொத்தத்தில் இது
நம் அனைவரின் தவறு.

"திருப்பதி உண்டியலில்
திருடன்
காணிக்கை செலுத்தினால்
அதற்கு
திருவேங்கடத்தானைக்
குற்றம் சொல்ல முடியுமா?"
என்கிறார்
கல்கி - ராஜேந்திரய்யர்

முடியாது.
மன்மதக் கலையைக்
கற்றுத்தேற
மாற்றான் மனையைப்
புணர்ந்ததற்காக
அந்த மகானை-
ஆதிசங்கரனை
நாம் எங்ஙனம்
குற்றம் கூறவியலும்?

உவமானங்கள்
உருவகங்கள்
நீதிக் கதைகள்...

கனவான்களே,
இடியாக முழங்கும்
உங்கள் வாதங்கள்
எங்களை
ஒழுக்கச் செவிடர்களாக்குகின்றன.

வானவில்லாய் ஒளிரும்
உங்கள் அறிவோ
எம்மை
வண்ணக் குருடர்களாக்குகிறது.

என்ன இருந்தாலும்
நீங்கள் படித்தவர்கள்
தர்ப்பைப் புல் முதல்
சூப்பர் கம்ப்யூட்டர் வரை
உங்கள்
மடி சஞ்சியில் அடக்கம்.

நீங்கள்
அறிவாளிகள்
எனவே
திறமை சாலிகள்
எனவே
ஒழுக்க சீலர்கள்

'சட்டப்படி'
ஒழுக்க சீலர்கள்.

மூடர்களும் தற்குறிகளும்
நிரம்பிய இந்த தேசத்தைப்
பரிபாலிக்க
நீங்கள் சகித்துக் கொண்ட
இன்னல்கள்தான் எத்தனை?



படிப்பகம்

www.padippakam.com

*எங்களுடைய கைம்மாறை,*
*தட்சிணையை,*
*நீங்கள்*
*ஏற்றுத்தான் தீரவேண்டும்.*

*அதற்கு முன்,*
*அத்வைதிகளே*
*ஒரே ஒரு ஐயம்!*

*உங்கள் பட்டங்கள்*
*வேசியின் அலங்காரத்தை*
*ஒத்திருப்பதை*
*நீங்கள் கவனிக்கவில்லையா?*

*வேதம், புராணம்,*
*இதிகாசம், உபநிடதம்,*
*எம்.ஏ, எம்.பி.ஏ,*
*மின்னணு அறிவியல்*
*இன்னபிற... இன்னபிற...*

*எதற்கு?*
*உங்களை விற்றுக்கொள்வதற்கு.*

*என்றாலும்*
*தரும சாத்திரத்திலிருந்து*
*நீங்கள் வழுவுவதில்லை.*

*தான் கற்ற கல்வியைத்தான்*
*பார்ப்பனன் - காசுக்கு-*
*விற்கக் கூடாது.*
*தன்னையே விற்றுக்கொள்ள*
*தடையேதுமில்லை.*

*எங்கள்*
*கண்ணீரைக் குடித்து,*
*பெருமூச்சை சுவாசித்து,*
*பெருங்குடலைத் தின்று*
*எம் குழந்தைகளின்*
*அரிச்சுவடியைத் திருடிய,*

*உங்கள் திறமையின்*
*கால் தடங்கள்*
*எப்போதும்*
*சொர்க்கத்திலேயே முடிந்தன*
*இப்போது*
*அமெரிக்காவில் முடிகின்றன.*

*உங்கள்*
*புத்திரர்களும்*
*பௌத்திரர்களும் (பேரன்கள்)*
*அமெரிக்காவில்.*

*உங்கள்*
*வானப் பிரஸ்தமோ*[10]
*மிலேச்சனின்*
*உலக வங்கியில்.*

*நீங்கள்*
*வெளிநாட்டில் குடியேறிய*
*இந்தியர்கள்.*
*நாங்கள்*
*சுதேசி அகதிகள்.*

*உங்கள் ஈசானம் டெல்லி*
*எங்கள் ஈசானம் சுடுகாடு.*
*உங்கள் மேற்திசை நியூயார்க்*
*எங்கள் மேற்திசை கட்டுமரம்.*

*திறமைசாலிகளே,*
*எங்கள் பாதங்களில்தான்*
*சீழ் வடிகிறது*
*உங்களுக்கோ*
*ஆன்மாவில் சீழ்வடிகிறது.*

*அதை*
*அத்தர் புனுகு சவ்வாது என்று*
*நாங்கள் பூசித்திரிந்த காலம்*



தென்னை மரத்தில்
புல் பிடுங்க ஏறிய
சிதம்பரம் செட்டியார்
இறங்கிவிட்டார்.
வெற்றி..! வெற்றி...!
நல்லொழுக்கத்துக்கு
வெற்றி..!
ஏறிய குற்றத்திற்கு
இறங்குவதே தண்டனை!

*முடிந்தது.*
*முடிந்தது.*

*தேசத்துரோகிகளே!*
*மனிதப் பதர்களே!!*

*"பழிக்குப் பழி என்று முழங்கி*
*நாங்கள்*
*வீதிகளில் சீறிவரும்போது*

*உங்கள்*
*கருணை மனுக்கள்*
*மழுப்பலான சமாதானங்கள்*
*எல்லாம் ஒதுக்கித்தள்ளப்படும்.*

*பிரமுகர்கள், பிரபலங்களின்*
*சிபாரிசுகள் செல்லுபடியாகாது.*

*தண்டனையும் பரிசும்*
*தெருவிலேயே தீர்மானிக்கப்படும்.*

*சொர்க்கமா நரகமா*
*அங்கேயே முடிவாகிவிடும்.*

*இறுதித் தீர்ப்பின் நாள்*
*இன்றே, இப்பொழுதே, இக்கணமே!"*[11]

*கயிறு அல்லது அரவம்.*

*திறமைசாலிகளே*
*தெரிவு செய்து கொள்ளுங்கள்!*

*என்ன துரதிருஷ்டம்!*
*இரண்டுமே*
*வியவகாரிக சத்யம்!!*

●

மருதையன்

## அடிக்குறிப்பு

1. கல்கியில் மத்தியமர் என்ற தொடரில் இடஒதுக்
டுக்கு எதிராக சுஜாதா எழுதிய சிறுகதை. அதிக
யின் மகளான நவநாகரீக தாழ்த்தப்பட்ட மங்கை
தகுதியில்லாமலேயே வேலை கிடைக்க, தகுதியுள்
முற்பட்ட சாதி இளைஞன் வாய்ப்பை இழந்
துவண்டு, காசில்லாததால் குழாய்த் தண்ணீரை குடி
துவிட்டுச் செல்வதாக மேல்சாதி அவலத்தைச் சொ
லும் சிறுகதை.

2. மனு நீதி நூல்: கொடும் குற்றம் செய்திருந்தாலு
ஒரு பார்ப்பனனை அரசன் அல்லது வேறு ஒரு படித்
பார்ப்பனன் மட்டுமே விசாரிக்க முடியும்.

3. மனுநீதி நூல்: எத்தனை வறுமைக்கு உள்ளான
லும் பார்ப்பனன் விவ்சாயத்தில் ஈடுபடக்கூடாது
எனும் விதி.

4. கி.பி. 6-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வடமொழி
நாடகம் மிருச்சகடிகம் அதாவது பொம்மை வண்டி
இந்த நாடகத்தில் திருடச் செல்லும் பார்ப்பனன் ஒ
வன் கன்னக்கோலின் ஒரு முனையில் முடிந்து சுவ
றில் வட்டமிடுவதற்கு தேவையான கயிறை எடுத்து
செல்ல மறந்து விடுவான். கயிறுக்குப் பதிலாகப் பூணு
லைப் பயன்படுத்துவான். அப்போது அவன் கூறு
வசனம் "பார்ப்பனனுக்குத்தான் பூணூல் எவ்வள
விதங்களில் பயனுள்ளதாக இருக்கிறது! முது
சொறிய, கன்னம் வைக்க...."

5. சம்புகன்: சூத்திரனுக்குத் தவம் செய்யும் உரிமை
யில்லை என்ற சநாதன தருமத்தை மீறி இறைவனை
துதித்ததற்காக ராமனால் கொல்லப்பட்ட சூத்திர வ
ணத்தவன்.

அஜமிலன்: பார்ப்பன குலத்தில் பிறந்து சூத்திர
பெண்ணை மணந்ததால் சாதி நீக்கம் செய்யப்பட்
வன். சாகும் தருவாயில் தனது மகன் நாராயணனை
அழைக்க "நாராயணா" என்று கூப்பிட்ட ஒரே கா
ணத்தினால் மோட்சம் பெற்றவன்.

6. மனுநீதி: மிகமோசமான பாவம் செய்திருந்தாலு
அவன் திருடிய சொத்துக்களுடன் பார்ப்பனனை
காயமின்றி நாடுகடத்த மட்டுமே முடியும்.

7. சௌந்தரிய லஹரி: தேவியின் மீது ஆதிசங்கர
எழுதிய தோத்திரம். தாயான தேவியை வருணிக்கு
வரிகள் காமசூத்திரத்தை விஞ்சக்கூடியவை.

கனகதாரா ஸ்தோத்திரம்: கூரையைப் பிய்த்து
கொண்டு தங்கம் கொட்டுவதற்காக ஆதிசங்கர
எழுதிய பாடல்கள்.

8. வியவகாரிக சத்யம்: "உலகமே மாயை (பொய்
என்றால் உனக்கு சோறும், துணியும், பொன்னும்
பொருளும் எதற்கடா?" என்று ஆதிசங்கரனை அ
றைய பொருள்முதல்வாதிகள் கேட்டபோது, ஆ
சங்கரன் சொன்னான்: "இவையெல்லாம் வியவக
ரிக சத்யம் (நடைமுறையில் உள்ள தற்காலிக உ
மைகள்) மட்டுமே; இறுதி ஆய்வில் பிரம்மமே ச
யம்; இவையெல்லாம் மாயை" என்றான்.

9. ராஜீவ் நினைவு அறக்கட்டளைக்கு ஹர்சத் மேத்த
25 லட்ச ரூபாய் நன்கொடை அளித்துள்ளான். அ
(சோனியா) வாங்கியது எங்ஙனம் சரி என்ற கே
விக்கு கல்கியின் பதில்.

10. வானப் பிரஸ்தம்: இல்லற வாழ்க்கையின் இறு
யில் (பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்) பிராமண
சத்திரிய, வைசிய குலத்தவர்கள் காட்டுக்குச் சென்
தவம் செய்ய வேண்டும் என்கிறது சநாதன தருமம்
இந்த கட்டத்திற்குப் பெயர் வானப்பிரஸ்தம்.

11. ஃபெய்ஸ் அகமது பெய்ஸ் கவிதையிலிருந்து.

படிப்பகம்

www.padippakam.com





# சத்யஜித் ரே: சில கேள்விகள்

''ரேயே கூறியதுபோல ஒரு குறிப்பிட்ட அளவு சமூக பிரக்ஞை தவிர்க்க முடியாதது. அவரது கல்கத்தா: மூன்று படங்கள்; ஜன ஆரண்ய ஆகிய நாலு படங்களும், கணசத்ரு, சகா ப்ரோஷகா ஆகியவையும் சமூக அக்கறை கொண்டவை. அவர் என்றுமே பிரச்சாரம் செய்தது கிடையாது. அதே சமயம் மனிதாபிமானம், உண்மையிலிருந்து விலகியதும் கிடையாது'' என்று கூறுகிறார்கள்.

ஒவ்வொரு கலைஞனும் வாழும்போது அவனைத் தாண்டி சமூக நிகழ்வுகள் வேகமாக நகரும். இங்கு ரேவை, குறிப்பாக, வங்கப்பஞ்சம், நக்சல்பாரி இயக்கம், அவசர நிலைமை, இந்து மதவெறி ஆதிக்கம் ஆகியவை கடந்துள்ளன.

வங்கப்பஞ்சம், வியட்நாம் மீது அமெரிக்கப்போர் இரண்டுக்கும் ரே ஊர்வலம் சென்றதாகச் சொல்வதுண்டு. வரவேற்க வேண்டியதுதான். ஆனால் உள்நாட்டில் அவசரநிலைமை பற்றி ரே வாய் திறக்கவில்லை. இந்துமத வெறிபற்றி 'கணசத்ரு'வில் வந்தாலும் டாக்டர் குப்தாவை மடக்கும் அவரது சகோதரன் 'முதலில் நீ இந்துவா, இல்லையா என்பதை சொல்' என்று கேட்கும்போது நடுங்கும் குரலில் குப்தா 'ஆம், நான் இந்து... ஆனால்...' என்று சொல்லி தடுமாறுகிறார். இன்றைக்கு இந்து மதவெறி வளர்ந்துள்ள நிலையில் நேர்மையான ஒருவனின் மூலம் ரே சொல்லவேண்டிய பதில் 'நான் இந்து அல்ல. இந்து என்று சொல்லி என்னை கேவலப்படுத்தாதே.'

ரேயைப் பொறுத்தவரை பாம்புக்கும் நோகக்கூடாது; தடிக்கும் நோகக்கூடாது; யாரையும் விரோதிக்கக்கூடாது: அதிலும் குறிப்பாக, அரசு அதிகாரத்தில் இருப்பவர்களோடு மோதக்கூடாது. அதனால்தான், கண்ணெதிரேயே கல்கத்தாவின் புறநகரில் ஆயிரக்கணக்கில் புரட்சித் துடிப்புமிக்க இளைஞர்கள் நிற்க வைத்து சுடப்பட்டபோதும், சிறைக்குள்ளேயே பலநூறு நக்சல்பாரி புரட்சியாளர்கள் கொல்லப்பட்டு வங்காளமே கொதித்தபோதும் - அழகை ஆராதனை செய்வதாக நழுவிக்கொண்டார் ரே.

ஒரு வேளை தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இருக்கலாமல்லவா? பிறகு ஏன் 'உண்மையின் பக்கம் என்றும் இருப்பவனே மனிதாபிமானி' என்று ஊருக்கு உபதேசித்தார்? முகத்தில் அறைந்த உண்மைக்கு ரேயின் பதிலென்ன? 'மௌனம். உலகளவில் பேர்பெற்ற ரே போன்ற கலைஞன் நேரடியாக அன்று அரசை எதிர்த்திருந்தாலும் ஒரு ஏழை கூலி விவசாயியை அடித்துக் கொன்றதுபோல் ரேயை செய்திருக்கமாட்டார்கள். ரே அன்று உண்மையைச் சொல்ல தயாராக இல்லை.

'நான் பிரச்சாரகன் அல்ல, கலைஞன்' என்று அவர் சொல்லலாம். தனது படத்தின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம், லஞ்சம் இரண்டையும் தோலுரித்ததாகச் சொல்லிக் கொள்ளலாம். 60 களின் இறுதியிலும், 70 களின் தொடக்கத்திலும் லஞ்சமும் வேலையின்மையும் இந்தியாவில் புதியதல்ல. ஆனால் புதியது என்பது புரட்சி இயக்கத்தின் தோற்றம்தான். அதுவே நக்சல்பாரி உழவர் புரட்சி. இதைப் பற்றி ரே ஏன் வாய் திறக்கவில்லை?

ரேயிடமிருந்தது கலை ஜிகினா மட்டுமே. ''1943 வங்கப் பஞ்சத்தில் 50 லட்சம் பேர் இறந்தனர்'' என்று ஒரு வரியை மட்டும் 'அஷானி சங்கேத்' படத்தின் கடைசியில் டைட்டில் போட்டாரே தவிர, பஞ்சத்தில் சிக்கிய விவசாயியின் நிலைமையை புறந்தள்ளிவிட்டு பஞ்சத்தில் சிக்கிய ஒரு பார்ப்பனக் குடும்பத்தின் ஒழுக்கக் குலைவு பற்றிய பிரச்சினையைத்தான் பெரிதாக அலசினார்.

ரேயின் ஜலசாகர் படம் முழுவதும் நளினமான சோகத்தில் தோய்ந்தது என்பார்கள். கலைகளைக் காப்பாற்றும் நிலப்பிரபு ஒருவனின் வாழ்க்கை சரிந்து நொறுங்குவதை சோகம் கலந்த இரக்கத்தோடு, பச்சாதாபத்தோடு சித்தரிக்கிறார்.

இவ்வாறு சமூகத்தின் தீங்குகளுக்கெல்லாம் குளிரக்குளிர பன்னீர் தெளிக்கும் இவரது அழகியல் மதிப்பில் எத்தனை சதம் மனித சாரம் இருக்கும்? ஒன்றிரண்டு விஷயங்களிலேயே இப்படி சோடைபோன கருத்துள்ளவர் ஒட்டுமொத்தமான சமூக மதிப்பீடுகளில் என்ன கண்ணோட்டத்தை கொண்டிருப்பார்.?

அவரது கோட்பாடு மனித உணர்வு கொந்தளிப்புகளை வெளியிடுவதுதான் என்றால் 70ஆம் ஆண்டுகளின் உணர்வெழுச்சிப் பேரலைகளை சித்தரிக்காமல் ஏன் முடக்கினார், ரே.?

அவரது சமகாலத்திலேயே எத்தனையோ செய்திப்பட (டாக்குமென்டரி) இயக்குநர்கள் வந்துவிட்டார்கள். கதையை வைத்துக் கொண்டு கதைபண்ணும் ரே எதையும் 'கற்பனை' என்று சொல்லி தப்பிவிடலாம். ஆனால், இவர்களோ நேருக்கு நேர் அரசோடு மோதுகிறார்கள். பிரச்சினைகளை சந்திக்கிறார்கள். இவர்களுக்கும் வயிற்றுக்குச் சோறு வேண்டும்; பல எதிரிகளையும் சந்திக்கவேண்டும். இத்தனைக்கும் இன்றைய சமூக அமைப்பில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள்தான் இவர்களும். இவர்கள்தான் போபால், பஞ்சாப், டெல்லி கலவரம், காஷ்மீர், அயோத்தி பிரச்சினை என்று எத்தனையோ பிரச்சாரப் படங்களைத் தயாரிக்கிறார்கள்.

டாக்டர் ஆலோசனையின் பேரில் 'கணசத்ரு' படத்தின் வெளிப்புறப் படப்பிப்பை தவிர்த்துவிட்டு முழுக்க முழுக்க 'உட்புற ஸ்டுடியோ' படப்பிடிப்பாகவே தயாரித்தார் ரே. டாக்குமென்டரி இயக்குநர்களோடு ஒப்பிட்டால் எல்லாப் படங்களையுமே ரே வீட்டிற்குள்ளேயே இருந்துக் கொண்டு - அதாவது சமுதாயத்தைப் புறக்கணித்துவிட்டு நான்கு சுவர்களுக்குள்ளேயே தயாரித்துவிட்டார் என்று சொல்லலாம்.

ரேயிடம் விமரிசனமேயற்ற ஆரோக்கியமற்ற மேல்நாட்டு வழிபாடும் நிரம்ப உண்டு. 1981-ல் ஒரு பேட்டியில் ''நம் நாட்டில் வன்முறைகள் ஏதோ ஒரு விதத்தில் தரம் தாழ்ந்தவை, கேவலமானவை, அற்பத்தனம், குரூரம், அருவெறுப்பானவை. மேற்கே வன்முறையை எதிர்கொள்வது மனதை சுத்தப்படுத்தி மேம்படுத்துகிறது. அவர்கள் எத்தனையோ நீண்ட காலம் எத்தனை அளப்பரிய பரிமாணத்தை அனுபவித்திருக்கிறார்கள்? அவர்களிடம் தொழில்



படிப்பகம்

www.padippakam.com

முறை தேர்ச்சிபெற்ற வன்முறையே இருக்கிறது. அதை படைப்பு நிலைக்கு உயர்த்தியவர் புனுவல் என்ற பிரெஞ்சு இயக்குநர்'' என்று சொல்லியிருக்கிறார்.

ரேயின் வரலாற்று உணர்வுக்கு இச்சான்றே போதும். பூர்வீக செவ்விந்தியர்க்கு எதிரான அமெரிக்க கொலைவெறியாட்டமும் மத்தியகால கொடுங்கோன்மையும், அற்பத்தனமும் குரூரமும் இல்லாத வன்முறைகளோ? ரே வன்முறையிலிருந்து சமூகக் காரணியை உருவி எடுத்துவிட்டு நல்ல வன்முறை, கெட்ட வன்முறை என்று பிரிக்கிறார்; அவ்வாறு நாம் செய்ய முடியாது.

மேலைநாட்டில் நடந்த ரத்தம் சிந்தும் வன்முறையும் வன்முறைதான்; ஆசிய கொடுங்கோன்மையின் கீழே தாழ்த்தப்பட்டவர், பெண்கள் மீது நடத்தப்பட்ட வருணாசிரம அடக்குமுறையும் பாரபட்சமும் வன்முறைதான்.

இவை ரேயின் பருந்துக் கண்களுக்குப் படவில்லை; பிரஞ்சு நாட்டு இயக்குநர் புனுவல் வன்முறையை 'படைப்பு' நிலைக்கு உயர்த்தியவர் என்று சொல்லும் ரே புனுவல் உருவான இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய நிலைமைகள் பற்றி, - அதாவது குடும்பங்கள் சிதைந்தது, அநாதைக் குழந்தைகளின் மனக் கொந்தளிப்புகள் பற்றி ஏதும் சொல்லவில்லை; புனுவல் அராஜகவாதத்தையே தனது அரசியலுக்கும், தத்துவத்திற்கும் இலக்கணமாக ஏற்றது பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. அந்நிலைமை விளக்கப்பட்டால்தான் புனுவலை விளங்கிக் கொள்ளமுடியும்.

ரேயிடம் நடுத்தர வர்க்க கோழைத்தனம், பழமைக்கு ஏங்கும் நிலப்பிரபுத்துவ சிந்தனை, மேலைநாட்டை வணங்கும் அடிமைப்புத்தி மூன்றுமே உண்டு.

ரேயைப் பல காரணங்கள் சொல்லி புகழ்ந்தவர்கள் - **''அவரை உலகத் தரத்திலுள்ள ழீன் ரென்வா, சாப்ளின், ஐசன்ஸ்டீன் ஆகிய மூவரோடு சேர்த்துப் போற்ற வேண்டும். ஏனெனில் அவர்களிடம் மொத்த மனோதத்துவம் (டோட்டல் சைகாலஜி) இருந்தது''** என்று போற்றுகிறார்கள். சாப்ளின், தனது படங்கள் மூலம் சமூக எதார்த்தத்தை விமர்சனம் செய்தார். முதலாளித்துவ அழுகலை விமரிசித்தார்; சோசலிசத்தை உயர்ந்த சமூக நெறி என்று பல நெருக்கடிகளுக்கிடையிலும் பிரதிபலித்தார். ஐசன்ஸ்டீன் ஒருபடி மேலே சென்று சோசலிசம் பிறந்த புரட்சியைப் படம் பிடித்தார்; ழீன் ரென்வா சமூக விமரிசகராக தனது படங்கள் மூலம் ஏகாதிபத்திய உலக யுத்தத்திற்கு எதிராக குரல் கொடுத்தார்.

ரே எந்த அடிப்படையில் இந்த வரிசையில் வைக்கப்பட்டார்? படத்தில் கையாளப்பட்ட உள்ளடக்கத்தால் அல்ல, வடிவத்தை வைத்து. பின்னாளில் ரென்வா வேறு வடிவத்திற்கு மாறினாலும், மேற்படி படங்களில் சமூக விமரிசனத்திற்கு ஏற்ற மனோதத்துவத்தையே கொடுத்திருந்தார். மற்ற இருவர் நிலையும் அதுவே. இன்னமும் சரியாக சொன்னால், சாப்ளின், ஐசன்ஸ்டீன் இருவரோடும் மாறுபட்ட கண்ணோட்டங்களில்

> ரேயைப் பொறுத்தவரை யாரையும் விரோதிக்கக்கூடாது. அதிலும் குறிப்பாக அரசு அதிகாரத்தில் இருப்பவர்களுடன் மோதக்கூடாது. கண்ணெதிரில் கல்கத்தாவில் நூற்றுக்கணக்கான நக்சல்பாரி இளைஞர்கள் நிற்கவைத்து சுடப்பட்ட போது ரே என்ன செய்தார்?

அலைபாய்ந்த ரென்வா இணைக்கப்படுவதும், அவர்களோடு ரே இணைக்கப்படுவதும் வேடிக்கையாக இருக்கிறது. வேடிக்கை என்பதைவிட, உள்நோக்கத்தோடு செய்யப்பட்டது என்று தோன்றுகிறது. பிரமாண்டமான உழைக்கும் வர்க்கத்தின் கூட்டுத்துவ சிந்தனை, சமூக விமரிசனம், புதிய சமுதாய வாழ்க்கை ஆகியவற்றோடு சேர்ந்ததுதான் ஐசன்ஸ்டின், சாப்ளினின் மனோதத்துவம். இதில் ரேயை ஒட்டவைப்பது கோமாளித்தனமானது.

ரேவையும் சாப்ளினையும் ஒப்பிட்டுப் பாருங்கள். சாப்ளின் கம்யூனிசத்தை விரும்பினார்; சொல்லும் விசயம் சுலபமாக புரிய வேண்டும் என்று அக்கறைப்பட்டார். சாப்ளினை எளிமையாக ரசித்து உணரமுடியும்; மற்றவர்க்கு ரசிக்கக் கற்றுக்கொடுக்க முடியும்; அன்றைய சமூக அமைப்பின்மீது வெறுப்புகொண்டவர் அவர்; மிக உயர்ந்த மனிதாபிமானத்தைப் படங்களில் பதிவு செய்தார்; சாப்ளினின் மனஉணர்வும், அவரது கலை வெளிப்பாட்டின் சமூகப்பாத்திரமும் இயல்பாக பொருந்தின. நகைச்சுவைக்கு சாப்ளினை எடுத்துக்காட்டாகச் சொன்னால், மற்ற கூட்டுத்துவ மனோ உணர்வுகளுக்கு எடுத்துக்காட்டாக ஐசன்ஸ்டினைச் சொல்லலாம்.

இந்த இரண்டு கலைகளுர்களின் கலையிலிருந்து ரே மாறுபட்டவர்; இதை அவரே சொல்லியிருக்கிறார்; ரே தனது படைப்புகள் புரிந்தால் நல்லது, புரியவில்லை என்றாலும் பரவாயில்லை என்ற கருத்தையே கொண்டிருந்தார். கலைஞனின் கலையின் உள்ளடக்கம் எந்த வர்க்கத்தைப் பற்றியதோ, அதைப் பற்றிய விமரிசனக் கண்ணோட்டத்தை முதலில் பெற்றிருக்க வேண்டும்; பிறகு எந்தப் பார்வையாளனுக்குப் புரியவைக்க விரும்புகிறானோ அதற்கேற்ற சினிமா மொழியையும் அவன் தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டிலும் குறைபாடு இருந்தால் கலை மறுக்கப்படும்; இரண்டிலும் எல்லாக் கலைஞரும் வெற்றியடைவதில்லை; அவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த கோட்பாடுகளை மக்கள் கலைஞர் ஏற்றிருக்க வேண்டும் - ரே 'கிடையாது' என்று மறுத்துவிடுகிறார்.

**''இந்திய சினிமா இயக்குநர்களைப் பொறுத்த அளவில் ரே ஒப்பிடமுடியாத இமயம்''.** - இப்படி சில ரே ரசிகர்கள் பிரமித்துப் போகிறார்கள். '70-'80 -களில். மிருணாள் சென் எடுத்த படங்களும், தென்னிந்திய பட இயக்குநர்களான கிரீஷ் காசரவள்ளி, கௌதம் கோஷ், நரசிங்கராவ்



'சாகா புரொசாகா' படத்திலிருந்து - மேட்டுக்குடியின்மீது இரக்கம்

படிப்பகம்

www.padippakam.com



'சாருலதா' - ஆணாதிக்கத்திடம் சமரசம்

போன்றோரின் படங்களும் ரேவோடு ஒப்பி டத்தக்கவையே; சமூக அரசியல் உள்ளடக் கத்தை வைத்து ரேயைவிட உயர்வாக மதிக் கப்பட வேண்டியவையே. அவர்களின் முழுப்பங்கு பற்றி எனக்கு வேறு மாறுபட்ட கருத்தக்களும் உண்டு. இருந்தாலும் ஒப்பீட் டுக்கு அவர்களை ஏற்கமுடியும்.

1943 வங்கதேசப் பஞ்சம் பற்றி வெளிப்படையான விமரிசனபூர்வமான, செய்திப் படத்தொகுப்பு இணைந்த பட மொன்றை மிருணாள் சென் எடுத்திருக்கி றார். இதனை ரேயின் 'அஷானி சங்கேத்' தோடு ஒப்பிட்டுச் சொல்லமுடியும். அதே போல ரேயின் 'ஜலசாகரோ'டு கிரீஷ் காசர வள்ளியின் 'கட ஸ்ரார்த்தா'வைச் சொல்லமு டியும். ஜலசாகர் சரிந்து விழும் நிலப்பிரபுத்து வத்தை இரக்கத்தோடு பார்க்கிறது; கட சுரார்த்தா சரிந்துவிழும் நிலப்பிரபுத்துவ பார்ப்பனியத்தின் குரூரம், பாசாங்குத் தனத்தை ஈவிரக்கமில்லாமல் தோலுரிக்கி றது.

விரிவாக இதனை விளக்கினால் பெரி தாகும் என்பதால் இந்த குறிப்போடு நிறுத் திக் கொள்கிறேன். கடைசியாக, ரேயின் ஆளுமை பற்றிய இரண்டு சிறு கேள்விகளை உங்கள் சிந்தனைக்கு வைக்க விரும்புகி றேன்.

ஒன்று: அவரது கலைவடிவம் பற்றி: இவரது படத்தில், அநேகமாக, எல்லாக் கதா பாத்திரங்களும் வாழ்வின் இயல்பான வேகத்தில் இல்லாமல் நிதானமாகவே இயங் குகின்றன. அது ஏன்?

ரே இதற்குப் பதில் சொல்லுகிறார்: 'எல்லா 'மெதுவாக நகர்தலுமே' ஒரு குறை என்று நான் கருதவில்லை. வேகமாகப் பாடும் பாடல்களும் உள்ளன; நிதானமாக பாடப்படும் பாடல்களும் இருக்கின்றன... இன்னும் கேட்டால் ஒரு வெற்றிகரமான நிதானப் படத்தை எடுப்பதுதான் அதிக அளவு சிரமமான காரியம்.''

நிலப்பிரபுத்துவம் வேரோடியுள்ள கிராமப் புறங்களில் காலம் சற்று மந்தகதியில் செல்லும். எல்லா கிராமமும், சிறுநகரங்களி லும் மொத்த வாழ்க்கையும் நிதானமாகவே நகருகிறது என்பது தவறு. அந்த வாழ்க்கை யில் துடிப்பும் வேகமும் உண்டு. போராட் டம், கலகம், சாவின் விளிம்பை தொட்டுத் திரும்பும் தீவிரம் அத்தனையும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் உண்டு.

ஆனால் ஆண்டை வர்க்கம் எல்லாவற் றையுமே மிகமிக சாவகாசமாக, ஓய்வாக செய்கிறது. மகிழ்ச்சி, சோகத்தைக்கூட அனு பவித்து நிதானமாகவே வெளிப்படுத்துகி றது. இதுவே செவ்வியல் இசை (கிளாசிகல்) வடிவத்தில் வருகிறது. ஒப்பீடாக, கிராமிய மக்கள் இசை வடிவத்தில் துள்ளலும், ஓட்ட மும், இழைவும் வித்தியாசமாக வருவதைப் பார்க்கலாம்.

இதுதான் நூற்றுக்கு நூறு சதவீத இலக்க ணம் என்று சொல்லவில்லை. ஆழமான பார் வையில் நாம் இந்த வித்தியாசத்தைப் பார்க் கலாம். ரேயின் படங்களில் கிராமப்புறம், நகர்ப்புறம் என்றில்லாமல் 90% நிதாளமான அசைவுகளாகவே வருகின்றன. இது சாதா ரண பார்வையாளனின் கருத்து. காரணம், ரே தேர்ந்தெடுத்த கதைமாந்தர்களின் வர்க் கப்பின்னனி. அவர்கள் பெரும்பான்மை யாக ரேயைப் போலவே மேட்டுக்குடியினர்.

ரேயின் எதார்த்தப் படப்பிடிப்பு இது தான் என்று நினைத்துக் கொண்டால், சிரமப் பட்டு ரசித்துவிடலாம். ஆனால், என் நண் பன் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னது நினைவிற்கு வருகிறது - துடிப் பான 18 வயது இளைஞன் நாற்காலியிலி ருந்து எழுந்து பக்கத்திலிருக்கிற வாசலுக் குப் போக பதினைந்து நிமிடங்களாகிறது, இதை எந்த எதார்த்தத்தில் சேர்ப்பது?

இரண்டாவது கேள்வி: அவரது துறையில் நடந்த போராட்டங்களில் அவ ரது பங்கு பற்றி: சமுதாயத்திலும் அரசியலி லும் கலைஞன் தன் கலைமூலம் செய்யக்கூ டிய போராட்டம் ஒன்றுமில்லை என்பதே ரேயின் கருத்து. ஆனால், அவரது சமகால இந்திய சினிமா இப்படிக் குப்பையாக இருக் கிறதே என்று அடிக்கடி வருந்துவது உண்டு. இந்த நிலையை மாற்ற, அதனோடு மோத அவர் ஒன்றும் செய்யவில்லையே ஏன்? கூவம் நாறுகிறது என்று சொல்லிக் கொண்டே எப்படி அதன் கரையில் ஒருவன் அமைதியாக வாழமுடியும்?

வியாபார / சந்தை சினிமாக்கலை என்ற கூவத்தின் மத்தியில் ரே ஒரு மூக்கரை யனாகவே வாழ்ந்தார். ரேயின் 13 படங்க ளில் நடித்த சௌமித்ர சாட்டர்ஜி, ஒரு மசாலா படத்தின் காதல் காட்சியில் நடித்த போது சிரித்தபடியே நடித்தாராம். காட்சி அபத்தமாக இருந்ததால் சிரித்தேன் என்று அவர் சொல்ல, ரேக்கு மூக்கின்மீது கோபம் வந்ததாம்: ''மறுபடி அதுபோல செய்யாதே. நீ ஒரு நடிகன். இது உன் தொழில். அதைப் போன்ற படத்தில் நடிக்கும்போது, அது சரியானது என்றே நம்பு. அதுதான் சரி. இல்லையென்றால் நீ நடிகனாகவே இருக்க முடியாது.'' கீதையின் கண்ணன் அர்ச்சுன னுக்குச் செய்த உபதேசம் இதுதான். இப்ப டியே வாழ்ந்த ரே ஒரு சரியான விடாப்பிடி யான போராட்டத்தையோ, அதற்கேற்ற ஒரு அமைப்பையோ கட்டியதில்லை; சந்தைச் சினிமாவை எதிர்த்து கலகமும் செய்ய வில்லை.

★

இந்தியாவின் புதிய சினிமாவுக்கு ரே ஒரு முன்னோடி, முற்போக்காளர் என்று சொல்கிறீர்களா? உங்கள் தரப்பு நியாயங் களை, பதிலைக் கொடுங்கள். மொட்டை யாக 'என்ன இருந்தாலும்' என்று இழுத்தீர்க ளானால் — உங்களுக்கு இதோ இந்தக் கவி ஞனின் வரிகளே பதிலாக அமையட்டும்:

*''ஏ சுயநல அறிவுஜீவிகளே!*
*நீங்கள் தப்பமாட்டீர்கள்!*

*உங்களுடைய கவிதைகளிலும் கதைக ளிலும்*
*இடம் பிடிக்க முடியாதவர்கள்*
*ஆனால்*
*உங்களுக்கு உண்டி சமைக்கும்*
*உங்களுடைய ஆடையை விடுக்கும்*
*உங்களுடைய காரை ஓட்டும்*
*உங்களுடைய பூந்தொட்டியைப் பராம ரிக்கும்*
*உங்களுடைய நாயைக் குளிப்பாட்டும்*
*அவர்கள் வந்தவுடனே*
*விசாரணை துவங்கும்.*

*ஏழை பாழைகளான எங்கள் வாழ்வும் கனவும்*
*எரிநெருப்பில் கருகிக் கொண்டிருந் தபோது*
*ஏ! சுகபோகிகளே, சௌந்தர்ய உபாச கர்களே*
*நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர் கள்?''*

(ஆட்டோ ரெனெ காஸ்புலோ, சிலி)

எனக்குப் பதில் சொல்லத் தேவை யில்லை என்றால், அழகியல் உணர்வும் கலாபோதனையும் கலாரசனையும் அற்ற மந்தைகளுக்கு - ஜடங்களுக்கு - ஜனங்க ளுக்கு, அவர்கள் கேட்கிறார்கள், நீங்கள் பதில் சொல்லியே தீரவேண்டும்.

● மருத்துவன்

படிப்பகம்

www.padippakam.com



# எயிட்ஸ்: அமெரிக்காவின் அதிர்ச்சியூட்டும் வியாபாரம்!

உலகெங்கும் வெகுவேகமாகப் பரவிவரும் அமெரிக்காவின் அருட்கொடையான எயிட்ஸ் எனும் பால்வினை நோயைத் தடுக்க விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் போராடிக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்க வியாபாரிகளோ எயிட்ஸ் நோயாளிகளையே இறைவன் கொடுத்த வரமாகக் கருதி அவர்களையும் வைத்துக் கோடிக்கணக்கில் சம்பாதிக்கின்றனர். எப்படி?

சமீபத்தில் நியூயார்க் டைம்ஸ் நாளேட்டில் வந்துள்ள ஒரு செய்தியைக் குறிப்பிட்டு சசி தரூர் எனும் பத்திரிகையாளர் எழுதியுள்ள கட்டுரை அமெரிக்க 'நாகரீகத்தின்' அருவெறுக்கத்தக்க முகத்தை அம்பலப்படுத்துகிறது.

மருத்துவ பரிசோதனையில் ஒரு அமெரிக்கக் குடிமகனுக்கு எயிட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடனே அந்தச் செய்தி அவனது குடும்பத்திற்கும், அலுவலகத்திற்கும் உடனே தெரிவிக்கப்படுகிறது. உடனே அந்த நோயாளி வேலை நீக்கம் செய்யப்படுகிறான். மனைவி, குடும்பம், சுற்றம் அனைத்தும் அவனை ஒதுக்கிவிடுகிறது. சமூகரீதியில் தனிமை, பொருளாதார ரீதியில் வறுமை இரண்டிற்கும் ஆளாக்கப்பட்டு தொழுநோயாளிகளைவிடப் பன்மடங்கு அவலநிலைக்கு அவன் ஆளாக்கப்படுகிறான். இப்படி நிர்க்கதியாக நிற்கும் எயிட்ஸ் நோயாளிகளுக்கு உடனே தேடிவந்து உதவிக்கரம் நீட்டுகிறார்கள் அமெரிக்க வியாபாரிகள் - அந்த நோயாளி ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசிதாரராக இருக்கும் பட்சத்தில்.

30 ஆண்டுகளில் செலுத்தத்தக்க 3 லட்சம் ரூபாய் பாலிசி ஒன்றை எடுத்து 5 ஆண்டுகள் பணம் கட்டியுள்ள நிலையில் ஒருவருக்கு எயிட்ஸ் வந்துவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். சோற்றுக்கே வழியில்லாத நிலையில் அவரால் தொடர்ந்து பிரிமியம் கட்டவியலாது என்பதுடன் தன்னை ஒதுக்கிவிட்ட குடும்பத்தாருக்கு தான் செத்தபின் 3 லட்சம் கிடைப்பதையும் அவர்கள் விரும்பப் போவதில்லை. அவர்களுக்கு உடனே தேவை பணம் - உணவுக்கு, சிகிச்சைக்கு.

இந்த இடத்தில்தான் நுழைகிறார்கள் வியாபாரிகள். அந்த நோயாளியிடமிருந்து அவரது மருத்துவக் குறிப்புகளை வாங்குகிறார்கள். பல்வேறு திறமையான மருத்துவர்களிடம் அவற்றைக் காட்டி அந்த நோயாளி எப்போது சாவான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு நோயாளியிடம் பேரத்தைத் தொடங்குகிறார்கள். மரணத்துக்குப்பின் இன்சூரன்ஸ் தொகையை தன்னிடம் கொடுத்துவிடுமாறு நோயாளியிடம் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு இன்சூரன்ஸ் தொகையில் 10% முதல் 50% வரை (30,000 முதல் 1.5 லட்சம் வரை) நோயாளியிடம் பணமாகக் கொடுத்து விடுகிறார்கள். அதன்பின் நோயாளியின் சாவை எதிர்பார்த்து இந்த வியாபாரிகள் காத்திருக்கத் தொடங்குகிறார்கள். இவர்களிடையே நடக்கும் பேரத்தின் உரையாடல் எப்படி இருக்கும்? கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்:

*நோயாளி:* 50,000 ரூபாய் மிகவும் குறைவு. ஒரு லட்சமாவது கொடுங்கள்.

*வியாபாரி:* அதெப்படி? நீங்கள் இறப்பதற்கு குறைந்தது 3 வருடம் ஆகும் என்கிறார் மருத்துவர். ஒருவேளை அதற்குமேலும் நீங்கள் உயிரோடு இருந்தால் என்னுடைய நட்டம் எவ்வளவு அதிகரிக்கும் தெரியுமா?

*நோயாளி:* 3 வருடமெல்லாம் நான் இருக்க மாட்டேன். எப்படியும் 2 வருடத்தில் செத்துவிடுவேன்.

*வியாபாரி:* அதெப்படி நான் உங்களை நம்ப முடியும்? ஒருவேளை எயிட்ஸிற்கு புதிய மருந்துகளை அதற்குள் கண்டுபிடித்துவிட்டால் நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள். ஆனால் நான் செத்தேன்.

*நோயாளி:* வீணாக ஏன் கற்பனை செய்து அச்சப்படுகிறீர்கள். இரண்டாண்டுகளுக்குள் நிச்சயம் நான் செத்துவிடுகிறேன். கர்த்தர் மேல் ஆணை! 70,000 ரூபாயாவது கொடுங்கள்.

வாசகர்களுக்கு இந்தக் கற்பனை உரையாடல் மிகையாகவோ அருவெறுப்பாகவோ தோன்றலாம். இவர்கள் இன்னும் கொஞ்சம் 'நாகரீகமான' சொற்களை வேண்டுமானால் பயன்படுத்தக்கூடும். ஆனால் பேரத்தின் சாராம்சம் வேறெப்படியும் இருக்கமுடியாது.

இந்த மரண வியாபாரத்தில் அங்கே ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் புரள்கிறதாம். அதுமட்டுமல், வியாபாரிகளின் நலன் கருதி (நோயாளிகளின் நலன் கருதியும்) நாடு முழுவதும் உள்ள எயிட்ஸ் நோயாளிகளின் பட்டியல், நோயின் தீவிரம், உயிர்வாழக்கூடிய காலம் - ஆகிய தகவல்கள் அடங்கிய வர்த்தக வழிகாட்டிகளும் வெளியிடப்படுகின்றனவாம்.

வாஷிங்டன் போஸ்ட் நாளேட்டில் இன்னொரு செய்தி. திருமணமான ஒரு பெண்ணிற்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ''நீங்கள் விவாகரத்து செய்யப்போவதாக அறிந்தேன்; நான் உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறேன் என்றது ஒரு குரல். ''நான் விவாகரத்து செய்வதாக எந்த முட்டாள் சொன்னான்'' என்று வெடித்தார் இந்தப் பெண்மணி. ''நேற்று கடைவீதியில் நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்'' என்றது அந்தக் குரல். ''நீங்கள் யார்'' என்று இந்தப் பெண்மணி கேட்க ''நான் வீட்டு புரோக்கர். நீங்கள் விவாகரத்து செய்தால் உங்களுக்கு வேறு வீடு தேவைப்படுமே நான் உதவலாமா என்றுதான் கேட்டேன்'' என்று பதில் சொல்லலியது அந்தக் குரல்.

'உங்களுடைய துயரத்தைப் பயன்படுத்தி நான் சம்பாதிக்கலாமா' என்பதை 'நான் உங்களுக்கு உதவலாமா' என்று நாசுக்காகக் கேட்கும் நாகரீகம் அமெரிக்காவிற்கே உரியது. இவ்வாறு நடந்துகொண்டது அநாகரிகமில்லையா என்று ஒரு பத்திரிகையாளர் அந்த வீட்டுத் தரகரிடம் கேட்டபோது ''பந்திக்கு முந்துவதுதான் வியாபாரத்தின் பாலபாடம்'' என்றானாம் அந்தத் தரகன். மரணம், பிரிவு, சோகம், கண்ணீர் அனைத்துக்கும் சந்தையில் ஒரு விலை உண்டு என்பதே அமெரிக்க முதலாளித்துவத்தின் பண்பாடு!

படிப்பகம்

www.padippakam.com



# ‘நாகரீக’ச் சமூகத்துக்கு எதிராக ஒரு ‘பழங்குடி’ப் பெண்ணின் கலகம்!

சுனி கொத்தால் - மனிதத் தன்மையுள்ள ஒவ்வொரு இந்தியனும் நெஞ்சிலே பதித்து வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு மாணவியின் பெயர்.

இவள், மேற்கு வங்கம் - மித்னாபூரில் உள்ள வித்தியாசாகார் பல்கலைக் கழக முதுகலை (எம்.ஏ.) மாணவி. 27 வயதான இந்த மாணவியின் படிப்பு மாந்தவியல்.

சோதனைகளும் வேதனைகளும் நிரம்பிய வாழ்க்கையினூடாக இந்த நிலையை இவள் அடைந்ததே மிகப் பெரிய சாதனை. அதையும் பிறகு பார்க்கத்தான் போகிறோம்.

அதற்கு முன்பாக அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்படுத்தக் கூடிய ஒரு செய்தி. எத்தனை கனவுகளை நெஞ்சில் சுமந்திருப்பாளோ அந்தப் பெண். கடந்த ஆகஸ்டு 16-ந் தேதி தனது வாழ்வைத் தானே முடித்துக் 'கொண்டாள். ஆம்! தற்கொலை செய்து கொண்டாள்.

ஏன்? காதல் தோல்வியா? படிப்பில் தோல்வியா? குடும்பத்தகராறா? கட்டாயத் திருமணமா? கற்பழிக்கப்பட்டாளா? கொடிய குற்றம் ஏதாவது செய்து விட்டாளா? - அதனால் மான - அவமானம் கருதித் தன்னை மாய்த்துக் கொண்டாளா?

இல்லை. இவை எதுவும் இல்லை. அவள் ஒரு ''பிறவிக் குற்றம்'' செய்து விட்டாள். அவள் மானிட இயல் கற்றாள். ஆனால் ஒரு மனிதப் பிறவியாய் வாழ முடியவில்லை. சுயமரியாதை அவளுக்கு மறுக்கப்பட்டது. இந்தச் சமுதாய ''சாபக் கேடான'' சாதிய இழிவு அவளை வாழவிடவில்லை; பலிவாங்கிக் கொண்டது.

சுனி கொத்தால் - லோதா என்கிற பழங்குடி ஆதிவாசிப் பெண்ணாய்ப் பிறந்தவள். அதுதான் அவளது ''பிறவிக் குற்றம்''.

ஆங்கிலேயே ஏகாதிபத்தியவாதிகளால் ''கிரிமினல் பழங்குடிகள்'' என்று முத்திரை குத்திக் கொடிய முறையில் ஒடுக்கப்பட்ட பல ஆதிவாசிகள், சாதிகளுள் ஒன்று லோதா. 1952-ல் அவை தனிப்பட்டியலில் சேர்க்கப்பட்டன.

மித்னாபூர் மாவட்டத்தில் வாழும் லோதா, அருகில் உள்ள புருலியா மாவட்டத்தில் வாழும் கேரியா உட்பட இரு பழங்குடி பிரிவினர் மேற்கு வங்கத்தில் உண்டு இவர்கள் வேட்டையாடிப் பிழைப்பவர்கள். காடுகள் அவர்களிடம் இருந்து பறிக்கப்படும் வரை அவற்றைச் சார்ந்து அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் சிலர் கூலிகளாக மாற்றப் பட்டுவிட்டனர். ஆனால் இன்னும் பலர் விறகு வெட்டியும், பழங்கள், இலை தழைகள், வேர்களை திரட்டியும் வாழுகின்றனர்.

இருந்தபோதும் இன்னமும் இந்த ''நாகரிக'' சமுதாயமும், போலீசும், அரசு நிர்வாகமும் அவர்களைக் கிரிமினல்களாகவே நடத்துகின்றன.

அந்தப் பழங்குடி ஆதிவாசிகளை சந்தேகித்தும் வெறுத்தும், தீண்டத்தகாதவர்களாக நடத்தியும் அவமானப் படுத்திவருகின்றன. அதுமட்டுமல்ல, எங்காவது ஆடோ, மாடோ, கோழியோ காணாமல் போய்விட்டால் போதும். இந்தப் பழங்குடி ஆதிவாசிகள்தான் திருடிவிட்டார்கள் என்று முத்திரை குத்தி அவர்களில் யாரையாவது பிடித்து கும்பலாய்த் தாக்குவதும், கண்களைத் தோண்டிவிடுவதும், கொன்றுவிடுவதும் அந்தப்பகுதி ''நாகரிகப் பொது மக்களி''ன் வழக்கம். 1983 வரை அந்தப் பழங்குடி ஆதிவாசிகளை வேலைகளில் சேர்த்துக் கொள்வதற்கே அரசு மறுத்து வந்தது. சில சமூக சேவகர்களின் இடைவிடாத முயற்சியினால் ஒரு சிலருக்கு வேலை கிடைத்தது.

லோதா, கேரியா போன்ற பழங்குடி ஆதிவாசிகள், சமூகத்தின் வேறு எந்தப் பிரிவுகளையும்விடக் கீழானவர்கள் அல்ல; நியாயமான வாய்ப்புகள் தரப்படுமானால் இதைத் தங்களால் நிரூபிக்கமுடியும் என்பதற்குச் சான்றாக விளங்கினாள் சுனி கொத்தால்.

லோதா ஆதிவாசிகளிலேயே முதல் பெண்ணாக 1981 ஆம் ஆண்டு சுனி கொத்தால் மேல் நிலைப்பள்ளித் தேர்வில் வெற்றிபெற்றாள். வங்கம், பீகார், ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் வாழும் பழங்குடி ஆதிவாசிகளிலேயே (1986 ஆம் ஆண்டு) இளங்கலைப் பட்டம் பெற்ற முதல் பெண்ணும் அவள்தான்.

அடுத்த ஆண்டு மித்னாபூரில் உள்ள ''ராணி சிரோமணி தாழ்த்தப் பட்ட மலைவாழ் பெண்கள் விடுதி''யின் கண்காணிப்பாளர் வேலை கிடைத்தது. அங்கே சுனி கொத்தால் கடுமையாக உழைத்தும் சமூக நலத்துறை மேலதிகாரிகளின் அவமானம் - இழிவுபடுத்துதலையே பரிசாகப் பெற்றாள். நோய் வாய்ப்பட்ட தனது சகோதரனையும், வயதான தந்தையையும் தனது அறை



படிப்பகம்

www.padippakam.com

யில் ஓரிரு நாட்கள் தங்கவைத்ததற்காக 'ஆண்களுடன் தங்கியதாக'க் குற்றஞ் சாட்டப்பட்டாள்.

தனக்கிழைக்கப்படும் கொடுமைகள் பற்றி மேற்கு வங்க அரசுக்குப் பல முறை புகார் செய்தும் எருமைமாட்டின் மீது மழைபெய்தாற்போல இருந்துவிட்டனர் போலிக் கம்யூனிஸ்டுகள். இதற்கிடையே சுனி மானிடவியல் முதுகலை படிப்பதற்குப் போனாள். அங்கே அவள் சந்தித்ததோ சகிக்க முடியாத அவமரியாதைதான்.

மானிடவியல் கல்வியில் லோதா பழங்குடியினர் பற்றிய பாடம் முக்கியமானது. லோதா பழங்குடிகள் பற்றி ஆய்வு செய்த டாக்டர் புரொபோத் பௌமிக் 'இன்னமும் அவர்கள் கிரிமினல்கள்தான்' என்று அவதூறாக எழுதியுள்ளார். இந்த நூலைக் கற்றுவரும் விரிவுரையாளர்களும் இதே தவறான கருத்தே கொண்டுள்ளனர்.

முக்கியமாக ஃபால்குனி சக்ரவர்த்தி என்கிற பார்ப்பனப் பேராசிரியர், சுனி கொத்தாலை வகுப்பில் பார்க்கும் போதெல்லாம் அவனுக்குப் பார்ப்பன வெறி பற்றிக் கொண்டு எரியும். ''கிரிமினல் கூட்டத்தைச் சேர்ந்தவளே! உனக்கெல்லாம் பல்கலைக் கழகப் படிப்பு எதற்கு? நீயெல்லாம் வாழ வேண்டிய இடம் காடுதான்! போய்த் தொலை!'' என்று பலமுறை வகுப்பிலேயே ஏசியுள்ளான். மற்ற மாணவ - மாணவிகள் தாமதமாக வந்தாலும் வகுப்புக்குள் அனுமதிக்கும் அதேசமயம் சுனி மட்டும் ஒரு சில நிமிடங்கள் தாமதமாக வந்தாலும் திருப்பி விரட்டப் பட்டாள்.

தொடர்ந்து தனக்கு இழைக்கப்படும் அவமானம் கொடுமை தாளாத சுனி தனது துறைத் தலைவியிடமும் துணை வேந்தரிடமும் முறையிட்டும் பயனில்லை. சமூக சேவகர்கள் மூலம் சட்டமன்றத்திலேயே புகார் எழுப்பப்பட்டபின் பெயருக்கு ஒரு விசாரணைக் கமிட்டி போடப்பட்டது. ஒன்றரை ஆண்டு ஆகியும் அதன் முடிவு தெரியவில்லை.

இதற்கிடையே பல்கலைக் கழக பார்ப்பன கும்பலின் ஏச்சும், இறுதித் தேர்வுக்கு அனுமதிக்க மாட்டோம் என்கிற மிரட்டலும் சுனியை பீதியடையச் செய்தன. இறுதியாகப் பல்கலைக் கழக கருத்தரங்கு மண்டபத்தில் பலர் முன்னிலையில் சுனி அவமானப்படுத்தப்பட்டாள்.

வெறுத்துப்போன, நம்பிக்கையிழந்த சுனி கரக்பூரில் ரயில்வேத் தொழிலாளியாக உள்ள தனது கணவனிடம் போனாள். இரண்டாவது நாளிலேயே தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டாள். எல்லாம் முடிந்துபோன பிறகு, ஒரு நீதித்துறை விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளது மேற்கு வங்க அரசு. ஆனால் அதன் போலீசு உடனடியாகவே தனது வழக்கமான வேலையைத் துவங்கிவிட்டது. விசாரணையைத் திசை திருப்பி குற்றவாளிகளைத் தப்ப விடுவதற்காக, சுனியின் தற்கொலைக்கு பொய்யான காரணங்களைக் கற்பிக்கும் முயற்சியில் இறங்கிவிட்டது.

2,500 ரூபாய் சம்பளம் பெறும் கீழ் நிலை அதிகாரியாகவும், எம்.எஸ்.சி. படிப்பவளாகவும் உள்ள கொத்தாலுக்கு வெறும் 1,200 ரூபாய் சம்பளம் வாங்கும் சாதாரணத் தொழிலாளியாக தனது கணவன் இருப்பது உறுத்தலாக இருந்ததாம். மேலும் படிக்கும்படி எவ்வளவோ சொல்லியும் பொறுப்பின்றி கணவன் இருந்ததால் இருவரிடையே பிணக்கு இருந்ததாம். இதுதான் சுனியின் தற்கொலைக்குக் காரணம் என்று கதை கட்டுகிறது போலீசு.

ஆனால் சுனிக்கு நேர்ந்த துயரம், கொடுமை ஒரு தனி மனுசிக்கு இழைக்கப்பட்டதல்ல. தன்மீது சுமத்தப்பட்ட ஒரு பிறவி இழிவை உதறித் தள்ளிவிட்டு முன்னேறத் துடிக்கும் ஒரு சமூகப் பிரிவு முழுவதற்கும் எதிரான தாக்குதல் இது.

சாதிகளெல்லாம் ஒழிந்து தீண்டாமையே இல்லாதவாறு சமூகப் புரட்சி நடந்துவிட்டதாகப் போலிக் கம்யூனிஸ்டுகள் பீற்றிக் கொள்ளும் அந்த வங்கத்தில் இன்னமும் சாதீய சமூக அவலம் நீடிக்கவே செய்கிறது. இன்னமும் ஒரு சமூக நிகழ்ச்சியிலோ, விருந்திலோ கலந்துகொள்ளும் லோதா பழங்குடியினர், தாம் சாப்பிட்ட பாத்திரங்களைத் தாமே கழுவி விடவேண்டும். அதுமட்டுமல்ல, சாப்பிட்ட இடத்தையும் மாட்டுச் சாணம் போட்டு தாமே மெழுகிவிடவும் வேண்டும்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஒரு கேரியா பழங்குடி ஆதிவாசி சமூக சேவகர், மோகா கேரியா என்பவருக்கு பங்கூரா மாவட்டம் அம்பிகா நகரில் ஒரு ''மான்பத்ரா'' விருது வழங்கப்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற உள்ளூர் நிலப்பிரபுக்கள் ஒரு குற்றப்பழங்குடி ஆதிவாசியை கௌரவித்தது அவமானமாகிவிட்டது என்று அறிவித்து ''பாவத்தைக் கழுவ யாத்திரை நடத்தினார்கள்.

சுனியும்கூட தனக்காக வாழ்ந்த பிழைப்புவாதி அல்ல. ''அவள் சுயமரியாதையும் தன்னம்பிக்கை உணர்வும் மிக்கவள். ஆதிவாசிகள் சாதிக்க முடியாதது எதுவும் கிடையாது என்று அவள் நிரூபிக்க முயன்றாள். ஆனால்

## சுன்னி கோதாலின் குமுறும் கவிதை

இவர்களும்
மனிதர்கள்தான்
ஆம்,
அப்படித்தான் சொல்கிறார்கள்
இவர்கள்தான் லோதாக்கள்.

சிறு ஓலைக்குடிசைகளில்
இவர்கள்
முடங்கிக் கிடக்கிறார்கள்.

குடிசை
பருவமழையின்
முதல் சாடலிலேயே
நொறுங்கிச் சாயும்
குடிசை
அதுவே அவர்கள் வீடு
ஆம், அதை
அப்படித்தான் அழைக்கிறார்கள்.

அவர்களுக்குப்
பெயர்களும் உண்டு
அவர்களும் மனிதர்களே.

கந்தல் மறைத்த உடல்
சீவாத தலை
எங்கெங்கோ காடுகளின்
வயிற்றைக் குடைந்து
சில கிழங்குகளுக்காக
ஓயாது அலையும் கைகள்

அம்மணச் சிறுசுகள்
புழுதியிலே
சிறுவர்களோ
மாட்டின் முதுகிலே
புத்தகம்....
எழுத்து....
தெரியாது.

அந்த மனிதர்களுக்கும்
ஒன்று தெரியும்
அடுப்பு குளிர்ந்து போனால்
மறுபடி பற்ற வைக்கலாம்-
தங்கள் குழந்தைகளை
அடகுவைத்து.

படிப்பகம்

www.padippakam.com

அவளது முயற்சிகள் தோற்றுப்போய் விட்டன; எனது இதயம் கொதிக்கிறது'' என்கிறார் சுனியின் முன்னேற்றத்துக்கு உதவிய சமூக சேவகியும் எழுத்தாளரு மான மாகாஸ்வேதா தேவி.

தனது வாழ்க்கை ஒரு முன்னுதார ணமாக விளங்க வேண்டும்; பழங்குடி ஆதிவாசிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை உலகறிய வேண்டும் என்று துடித்தவள் சுனி. அதற்காக தனது வாழ்க்கை வரலாற்றை ''பார்த்திக்'' என் கிற மராட்டியக் காலாண்டிதழில் எழுதி னாள்.

அதிலே ஒரு சம்பவம். சுனி சிறுமி யாக இருந்தபோது அவளது கிராமத்து சரசுவதி கோவிலுக்கு ஒருசமயம் பூசை செய்வதற்குப் போனாள். ஆனால் அவ ளது பூசைப் பொருட்களை கிராமத்து மேல் சாதிக்காரர்கள் விசிறியடித்து விரட்டினார்கள். இப்படி ஒரு லோதா பெண் துணிச்சலோடு பூசை செய்ய வரு வது சாமியின் புனிதத்தையே கெடுத்து விடும் எனக் கூறி அவளை ஏசினார் கள். அவள் நெஞ்சில் அது ஆழமான வடுவாய்ப் பதிந்தது.

இப்படிப்பட்ட கொடுமை இறுதி யில் அவளது உயிரையே காவு கொண் டுவிட்டது. ''கருங்காக்கைக் கூட்டத்தி டையே சிக்கிக் கொண்ட குயில்போல சுனி கொத்திக் குதறப்பட்டாள்'' என்கி றார் அவளது சாவுக்கு இரங்கல் தெரி வித்த கூட்டத்தில் பேசிய ஒரு வங்காளி எழுத்தாளர், கௌர் கிஷோர் கோஷ்.

ஆம்! சுனி தானே தற்கொலை செய்து கொள்ளவில்லை! தற்கொலை செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்கப் பட்டாள். அவளது கனவுகளோடு அவ ளையே சிதைத்துவிட்டார்கள் சமூகக் குற்றவாளிகள்.

இந்தமாதிரியான சமயங்களில் ''தற்கொலை என்பது கோழைத்தனம் அல்ல. சமூகத்துக்கே எதிரான கலகம்'' என்கிறார் மாவோ. சுனி தன் எதிர்ப்பை - தார்மீகத் தாக்குதலை இந்த விதத்திலே வெளிப்படுத்தினாள். சுயமரியாதையும் தன்னம்பிக்கையும், கடின உழைப்பும் கொண்ட ஒரு நேர்மையான, தூய்மை யான உள்ளத்தைச் சகித்துக்கொள்ள அனுமதிக்காத இந்த சமுதாயம், தான் வழ்வதற்குத் தகுதியற்றது என்று அவள் ஒதுக்கித் தள்ளிவிட்டாள். சுனியின் சாவுக்குக் காரணமான சமூகக் குற்றவா ளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அவள் மானத்தோடும், மனுசியாக வாழும் உரிமையைப் பெற்றுத் தரமுடி யாத நாம் இதற்காக வெட்கித் தலைகு னிய வேண்டும்.

● பஷீர்



# சென்னை மிலாதுநபி கலவரம்:
# விநாயகர் ஊர்வலத்தின் எதிர்விளைவு

சென்னை மிலாதுநபி ஊர்வலத்தில் கலவரம் நடந்தது. கலவ ரம் ஏன்நடந்தது, செய்தது யார் என்பது குறித்து பல கருத்துக்கள் சொன்னார் கள். வண்ண வித்தியாசமில்லாமல் எல்லா ஓட்டுக் கட்சிகளும் மிலாது நபி ஊர்வலத்தில் போலீஸ் பாதுகாப்பு போதவில்லை, என்பதையே முக்கிய மாக கூறுகின்றனர். ஆலோசனைக் கூட் டத்தில் 'எந்தப்பிரச்சனையும் வராமல் பார்த்துக் கொள்கிறோம்' என்று முஸ் லீம்தரப்பில் சொல்லப்பட்டது. இதனால் போலீஸ் பாதுகாப்பு அதிகம் போடப்ப டவில்லை. 'முஸ்லீமை நம்பினால் இப் படித்தான்' - இப்படி ஒரு கருத்து தொனிக்க எல்லாப்பத்திரிக்கைகளிலும் செய்தி வருணனை எழுதப்பட்டது.

அன்று என்ன நடந்தது?

செப் 10 அன்று மிலாது நபி ஊர்வ லத்தில் நடந்த சம்பவம் 'வீரப்பிள்ளை யார்' ஊர்வலத்தில் தூண்டப்பட்டவற் றின் எதிரொலி. பிள்ளையார் ஊர்வலம் தமிழ்நாட்டிற்குப் புதிது; அதிலும் 'இந்து மத எழுச்சி'யாக நடத்தப்படுவது மிக மிகப் புதிது. 1893-ல் பாலகங்காதர தில கரால் வடக்கே மகாராட்டிரமெங்கும் கோலாகலமாக பார்ப்பன பேஷ்வா ராஜாக்களின் திருவிழாக்கள் போல பிள்ளையார் ஊர்வலம் ஏற்பாடு செய் யப்பட்டது; அன்று ஊர்வலங்கள் நடந் ததை ஒட்டி இந்து-முஸ்லீம் கலவரங்கள் வெடித்தன. நூறாண்டு கழிந்துவிட்டது; இப்போதும் கலவரம் வெடித்துள்ளது- இதே சென்னை திருவல்லிக்கேணியி லேயே 90-ஆம் ஆண்டு கலவரம் நடந் தபோது முதல் அத்தியாயத்தை ஆர் எஸ் எஸ் துவக்கி வைத்தது. இப்போது இரண்டாம் அத்தியாயம் நடத்தப்பட்டி ருக்கிறது;

இன்று வீரப்பிள்ளையாராக புதிய பரிமாணம் எட்டிவிட்டது. உள்ளூரில் 'சாஸ்திரமுறை' கொஞ்சமும் வழுவா மல் நடத்தப்பட்டுவந்த பிள்ளையார் சதுர்த்தி, சமூக விழாவாக மாற்றப்பட்ட தும் எல்லைகளை உடைத்தார்கள்; சாஸ் திரங்களை வளைத்தார்கள்; அக்கிரகா ரத்திலிருந்து சேரிகளுக்கு பாலம் கட்டி னார்கள்; 304 சேரிகளை வளைத்துப் போட்டார்கள்; 'சாதிமதபேதம் காட்ட மாட்டோம்' என்று வேஷம் கட்டினார் கள் சாதிவெறிச் சநாதனிகளான விஸ்வ இந்து பரிசத்தினர்.

பழைய முறைகள் மாறின. மைய அளவில் திருவல்லிகேணியில் விழாக் கமிட்டி கட்டப்பட்டது. சூட்சும ஆணையை காஞ்சி சங்கரமடம், கொடுத்தது. மொத்தம் 1186 சிலைகள்; தலைமேல் படமெடுத்த நாகத்தோடு ஒரு விநாயகர்; கையில் வாளேந்திய விநாயகர், என்று விதவிதமாக சிலை கள் தயாரிக்கப்பட்டன.

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் போரின்போது திருப்பதி வெங்கடேசப் பெருமாளின் கையில் வாள்கொடுக்கப்

படிப்பகம்

www.padippakam.com

பட்டு அலங்கரிக்கப்பட்டது. இந்து உணர்வைத் தூண்டுவதற்காகவும், முஸ்லீம் எதிர்ப்பைக் கிளர்வதற்காகவும் அது ஓர் ஏற்பாடு. அதேபோலவே இப்போது விநாயகர் கையிலும் வாள் கொடுக்கப்பட்டுவிட்டது. இந்துக்களின் மத்தியில் 'போர்' பற்றிய சிந்தனையைத் தூண்டுவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறது விஎச்பி. நாடுகளின் போர் அல்ல; உள்நாட்டிலேயே மதப்போர்.

போருக்கான ஏற்பாடுகள் போலவே அனைத்தும் மையரீதியில் நடந்தது. தேசபக்தி பஜனைப் பாடல்கள், ஒருமைப்பாட்டு கதாகாலட்சேப காசெட் - 'தேசபக்தி நம ஓம்' போன்ற புதுநாமாவளிகள் இருந்தன; கதாகாலட்சேபத்தில், முடியுமிடத்தில் ராமாயண பலன் சொல்வார்களே அதுபோல, 'காசெட் கேட்பவர்கள்' பிரிவினைவாத உணர்விலிருந்து விடுபட்டு தேசபக்தி, இந்து உணர்வு பெறுவார்கள்' என்று பலன் சொல்லப்பட்டது; மையரீதியில் சிலை வைத்த இடங்களுக்கெல்லாம் சென்று பேசுவதற்கு 'கனல்தெறிக்கும்' பேச்சாளர்கள் வந்தார்கள். மோடிமஸ்தான் வித்தை போலவே 'பிள்ளையாரைப் பற்றி கேலியா பேசுகிறீர்கள்? இதோ உங்களுக்குச் சுடச்சுடப்பதில் தருகிறேன்' என்று சொன்னார்களே தவிர, க்டைசிவரை ஒரு வெங்காயமுமில்லை.

முழக்கங்கள் ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரமாக அச்சடித்துக் கையில் கொடுக்கப்பட்டன. 'அச்சமற்ற இந்துவே, அணிதிரண்டுவா!' என்று அறைகூவல் இருந்தது. யாரிடம் இந்து அச்சப்பட்டுக் கிடக்கிறான்? 'தேசபக்தியை வளர்த்திடுவோம் / தீயசக்தியை ஒழித்திடுவோம்' என்றொரு முழக்கம் - இதேபோல 'தீயசக்தியை ஒழிப்பதாகத்தான்' ஜெயலலிதாவும் அடிக்கடி சொல்லிக் கொள்கிறார்.

விஸ்வ இந்து பரிசத் செய்த ஏற்பாடுகளுக்கு அதன் பொருளாளர் ஹரிகோபால் அகர்வால் போன்ற வடக்கத்திச் சேட்டுகளும், நங்கநல்லூர் சிவராஜ் ஸ்டோர்ஸ் போன்ற தமிழ்நாட்டு நாடார்களும் லட்சக்கணக்கில் காசு செலவழித்திருக்கிறார்கள். ஓரிடத்தில் பிள்ளையார் பந்தல்போட்டு சிலை வைக்கிறார்களென்றால் அங்கே உள்ள விஎச்பி ஊழியருக்கோ அல்லது உள்ளூர்ப் பிரமுகருக்கோ (அவர் எந்த கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பரவாயில்லை) சில லட்சம் மொத்தமாகக் கையில் கொடுக்கப்பட்டது.

மத நம்பிக்கையைப் பரப்புவது, பாரம்பரியமான ஒழுக்கவிதிகள் - முறைகளையும் பரப்புவது என்பது கூட விஎச்பி குறிக்கோள் அல்ல; சுருக்கமாகச் சொன்னால், மத-பக்தி இயக்கம் நோக்கம் அல்ல; அதனால்தான் சேரிகளில் உள்ள தேர்ந்தெடுத்த பொறுக்கிகளை மட்டுமே அலசி சேர்த்தது - ஆள் பலத்திற்காக; சேட்டு, நாடார், செட்டியார் கஜானாக்கள் - பண பலத்திற்காக.

வடக்கத்தி 'ஹோலி'யின் வழக்கமான கலர்பொடி தூவி வெறியாட்டம் போடுவது வழிநெடுக நடந்தது; காலிகளின் வேடிக்கைகளுக்கும், சேட்டைகளுக்கும் இதில் வசதி இருந்தது; நீல வண்ணம் பூசிய ராமனின் தூதர்கள் ராக்கம்மா கையத்தட்டு பாணியில் டப்பாங்குத்து போட்டுக் கொண்டே 'அயோத்தி ராமனுக்கு ஆலயம் அமைப்போம்' என்று ஆடிச் சென்றது அயோத்தி வெறியாட்டங்களை நினைவுக்குக் கொண்டு வந்தது.

ரசிகர் மன்ற, பொறுக்கி கலாச்சாரங்கள் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்று முடிவெடுத்தே கோவிந்தாச்சாரி, எல்.கே.அத்வானி வகையறாக்கள் இறங்கியிருக்கிறார்கள். பூனாவில் இந்திய அரசின் சுற்றுலாத்துறை உதவியோடு பிள்ளையார் விழா நடந்தது. இந்தி நடிகை மீனாட்சி சேஷாத்திரியின் நாட்டியம், இசைவிழா, குஸ்திச் சண்டை, விளையாட்டுப் போட்டி என்று நடத்தப்பட்டு மக்களின் வரிப்பணம் சூறையாடப்பட்டது. ஐதராபாத்தில் ஒரு பக்கம் கிருஷ்ணன் வேஷம் தரித்தவரும், எதிர்ப் பக்கம் பிள்ளையார் வேஷம் தரித்தவருமாக கிரிக்கெட் ஆட்டம் ஆடி ரசிகர்களைத் திக்குமுக்காட வைத்துவிட்டார்கள். தமிழ்நாடு புதிய களம் என்பதால் ஆபாச நாட்டியம், கைக்கொட்டிலிருந்து அறிமுகம் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

பொழுதுபோக்கு, வெறியாட்டம், வாய்ப்பு கிடைத்தவுடனேயே வீசிறிவிட்டுக் கலவரமாக்குவதற்காக மோதல் ஏற்பாடுகள் (பிள்ளையார் சிலைக்குக் கீழேயே இரும்புக் கம்பிகள், சங்கிலிகளை மறைத்து வைத்துக் கொண்டு வந்தார்கள்.) — இதுவே வீர விநாயகரின் ஊர்வலம்.

திலகர் காலத்தில் தேசீயம், ஆங்கிலேய எதிர்ப்பு என்ற போர்வையில் முஸ்லீம் எதிர்ப்பு, இந்து ஐக்கியம்; இப்போது, இந்து தேசீயம் என்ற முழக்கத்தில் முஸ்லீம் எதிர்ப்பு.

• • •

இந்த பின்னணியில்தான் மிலாது நபி ஊர்வலத்தைப் பார்க்கவேண்டும். இதற்குத் தலைமைதாங்கி நடத்தியவர்கள் குறுக்குவழியில், சமூக விரோத வழிகளில் புதுப்பணக்காரர்களாக உருவானவர்கள். சமரச அரசியலை வைத்து முஸ்லீம்களை ஒரு அமைப்பின் கீழ் திரட்டிக் கொண்டிருந்த சுலைமான் சேட் போல இல்லாமல், அதிரடி வன்முறை சாகச அரசியலின் மூலமாக மட்டுமே முஸ்லீம்களைத் திரட்ட முடியும் என்று முடிவுக்கு வந்து இவர்கள் செயல்படுகிறார்கள். ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு இணையாக தற்போது உதிரி, பொறுக்கி வர்க்கத்தைப் பொறுக்கி எடுத்து மத அரசியல் நடத்துகிறார்கள். அதனால்தான் மிலாதுநபி ஊர்வலத்தில் ஆங்காங்கே நிறுத்தி அரசியல்வாதிகளைப் போல பிறைக்கொடி ஏற்றினார்கள்; ஒருவித கர்வத்தோடு, செருக்கோடு புகைப்படக்காரருக்கு 'போஸ்' கொடுத்தார்கள்.

கேரளாவில் உதயமாகியுள்ள இஸ்லாமிக் சேவா சங், இப்படிப்பட்ட ஓர் அமைப்பே. தமிழகத்தில் புதுப்பணக்காரர்களான நூர் முகம்மது, யூசுப், ஜிஹாத் கமிட்டிகள் கிளம்பியிருக்கிறார்கள்.

இவர்களின் திட்டத்தினால்தான் தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்து

## ஊர்வலக் காட்சிகள்

★ மசூதிகள் பிரதானமாக உள்ள திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில்தான் ஊர்வலம் போவோம் என்று வி.இ.ப. பிடிவாதம் பிடித்து போலீஸ் ஒத்துழைப்பைப் பெற்றது.

★ ஐஸ் ஹவுஸ் மசூதி அருகே ஒவ்வொரு பிள்ளையாராக நிற்கவைத்து ஆராத்தி எடுத்து, வெடி வெடித்து (வெடிகள், ராக்கெட்டுகளை மசூதி மீதே எறிந்து ஆர்ப்பாட்டம் செய்தது), கோஷமிட்டு அனுப்பியதால் மணிக்கணக்கில் ஊர்வலம் தாமதிக்கப்பட்டது. போலீஸ் மௌன சாட்சி.

★ முழக்கங்களில் சில:

'இந்த நாடு ஹிந்து நாடு
ஹிந்து மக்கள் சொந்த நாடு'
'ஒன்றுபட்ட ஹிந்து சக்தி
வென்று தீரும் உண்மை உண்மை'
'ஹிந்து கோயில் காத்திட
ஹிந்துவே திரண்டுவா'
'காலன் நம்மை அழைத்திட்டாலும்
காவிக்கொடியை ஏந்திடுவோம்'

★ 'இந்துக்கள் மட்டும் அநாதைகளா, என்ன?' என்ற 'இந்துமுன்னணி சமய வகுப்பு இயக்கத்தினரி'ன் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

மிலாது நபி ஊர்வலத்தில்:

★ முதல் 8 கி.மீ. தூரம் ஊர்வலம் ஒழுங்காகவே சென்றது. கடைசி 1 கி.மீ. தூரத்தில்தான் கலவரம் ஏற்பட்டது.

★ ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிய எஸ்.பி.நூர் முகம்மது, மோசடி வழக்குகளில் சிக்கிச் சிறை சென்று மீண்ட மாவீரர்; மர்தேகா ஏ.யூசுப் சிங்கப்பூர் கள்ளக்கடத்தல் பேர்வழி என்று அப்பகுதி முஸ்லீம் மக்களே கூறுகின்றனர்.

★ ஆர்.எஸ்.எஸ்ஸின் அடியாட்களாக பகுதியில் உலவுவது தாழ்த்தப்பட்ட மற்றும் பிற ரிக்ஷாத் தொழிலாளர்களில் சிலர் என்பதால் ஊர்வலத்தில் அவர்களுடன் மோதல் ஏற்பட்டது.

★ சம்பவ நாளன்று இரவு மீர்சாகிப்பேட்டை பகுதியில் ஏற்கெனவே ஆர்.எஸ்.எஸ். தொடர்புள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் சேரிகளிலிருந்து சில ரவுடிகள் முஸ்லீம் கடைகளையும் மசூதியையும் அடித்து நொறுக்கினர்.

படிப்பகம்

www.padippakam.com

லாரிகளில் முஸ்லீம் மக்கள் திரட்டிக் கொண்டு வரப்பட்டார்கள் ஒழுங்காக வந்து கொண்டிருந்த ஊர்வலத்தின் கடைசி ஒரு கிலோ மீட்டர் தொலைவுப் பகுதி திருவல்லிக்கேணியைத் தாண்டிக் கொண்டிருந்தது ஏற்கனவே வீரப்பிள்ளையாரின் விஷமங்கள் ஒருவகையான பீதியை பகுதி மக்களிடம் பரப்பியிருந்தது. இச்சூழ்நிலையில், 'யாரோ முஸ்லீம்களைத் தாக்கிவிட்டார்கள்' என்ற ஒரே ஒரு செய்தி கிடைத்ததும், பாதுகாப்புக்காகத் தாக்குதல் என்று ஊர்வலத்தில் வந்தவர்கள் இறங்கினார்கள். பிள்ளையார் ஊர்வலத்துக்குப் பணம் வாரிவீசிய மதன்லால் சேட்டின் வீடியோ கடை சூறையாடப்பட்டது.

கலவரத்தில் ஈடுபட்டவர்கள் உள்ளூர் முஸ்லீம்கள் அல்ல. வெளியூரிலிருந்து வந்தவர்களே என்று ஒரு கருத்து சொல்லப்படுகிறது. இதை உறுதி செய்ய இயலவில்லை. ஆனால், ஒரு புகைப்படக்காரர் தாக்கப்பட்டபோது, உள்ளூர் முஸ்லீம்களே அவரைக் காப்பாற்றினார்கள் என்ற தகவலைத் திரட்ட முடிந்தது; அதேபோல, '90 ஆம் ஆண்டு சம்பவத்தின்போது இரு தரப்புக் கொடிகளும் (தெருக்களில் கட்டப்பட்ட தோரணங்களும்) கிழித்தெறியப்பட்டன; இந்தமுறை அப்படி எந்தச் சேதமும் நடக்கவில்லை; எனவே வெறியூட்டப்பட்ட ஒரு கும்பலே கலவரத்தில் கைவரிசை காட்டியது என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியும்.

திருவல்லிக்கேணியில் பாரம்பரியமாக இந்துக்கள் - முஸ்லீம்கள் பரஸ்பரம் பல உதவிகள் செய்து கொண்டு இணக்கத்தோடு வாழ்கிறார்கள்; ஆனால் சென்னை மொத்த வியாபாரத்தில் - இரும்பு முதல் எலெக்டிரானிக்ஸ் (மின்னணுத்துறை) பொருட்கள் வரை போட்டி இருக்கிறது; தவிர, சிறு வியாபாரிகள் மத்தியில் அன்றாடப் போட்டி இருக்கிறது. இவற்றை மதவெறிக் கும்பல்கள் தங்களது குறுகிய பிழைப்புவாதத்திற்குப் பயன்படுத்துகின்றன. இவர்களே - வீரப்பிள்ளையார், நபி பிறந்த நாள் ஊர்வலங்களில் மோதலில் இழுக்கப்பட்டார்கள்.

சம்பவத்துக்கு முன்னும் சரி பின்னும் சரி முஸ்லீம்கள் தற்பாதுகாப்பு ஒன்றையே யோசித்தார்கள். பலர் இதையே வலியுறுத்திப் பேசினார்கள். வீரப்பிள்ளையார் ஊர்வலத்தன்று ஐஸ்ஹவுஸ் பள்ளிவாசலின் மாலைத் தொழுகையையே ரத்து செய்துவிட்டார்கள். 1990 ஆண்டு சம்பவத்தின்போது பிரச்சினைக்கு உள்ளான அதே மசூதிமீது, இந்த ஆண்டு 'ராமனின் தூதர்கள்' வெடி ராக்கெட் வீசி, கொட்டுக் கொட்டிக் கேலி செய்தார்கள். இவ்வளவுக்குப் பிறகும் முஸ்லீம்கள் அமைதியாகவே இருந்தார்கள்.



**போலீஸ் உயர்மட்ட அதிகாரிகள் இந்துமத வெறியர்களை ஆதரிக்கும்போது போலீசு காவலை அதிகரிப்பதால் பயன் என்ன?**

இந்து மதவெறிக்கு அடியாள் வேலை செய்யும் அ.தி.மு.க. ரவுடி திருவல்லிக்கேணி - மாட்டாங்குப்பம் வீரமணி இரவு நடந்த பதில் தாக்குதலில் மும்முரமாக ஈடுபட்டான். ஆனால் அதே வீரமணியிடம் இப்போது முஸ்லீம் பிரமுகர்கள் சிலர் சென்று சமரசம் பேசி சமாதானப்படுத்தியிருக்கிறார்கள். பிரச்சினை தொடராமல் எப்படியாவது முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்பதில் முஸ்லீம்களில் சிலர் முயற்சி செய்திருக்கிறார்கள். அமைதி திரும்ப வேண்டும் என்பது எல்லா தரப்பு மக்களின் எண்ணம்; அதில் முஸ்லீம்கள் தற்காப்பு நிலையிலிருந்து இந்த வேண்டுகோளைக் கொடுக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

● ● ●

பிரச்சினைக்குள்ளேயே போகாமல், ஏதாவது செய்தி கொடுத்து மக்களை 'அறிக்கை'க் குப்பைகளில் மூழ்கடித்து விடுகின்றன ஓட்டுக்கட்சிகள். 'போலீஸ் பாதுகாப்பு போதவில்லை' என்பது அப்படிப்பட்ட ஒரு அறிக்கைக் குப்பையே.

சம்பவ இடத்துக்கு வந்த போலீஸ் பயந்துநடுங்கி வேனுக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. போலீஸ் அதிகாரிகளில் பலர் நேரடியாக இந்துமதவெறியை ஆதரித்தார்கள். திருவல்லிக்கேணியிலேயே ஒருபகுதியில் ஓர் ஏ.சி. ''ஏண்டா பிள்ளையார் வைக்கலே'' என்று மிரட்டியிருக்கிறார். முன்னாள் டி.ஜி.பி. ரவீந்திரனைப் போன்ற மேல்மட்ட அதிகாரிகளை வி.எச்.பி. வளைத்துப் போட்டிருக்கிறது. ம.க.இ.க., தி.மு.க., பா.ம.க. -வினர் மீது நூற்றுக்கணக்கான பொய்வழக்குப் போட்டு ஜாதிக்கலவரத்தைத் தூண்டுகிறார்கள் என்கிறது போலீஸ். ஆனால் பிள்ளையார் ஊர்வலத்தில் மதவெறி முழக்கங்களைப் போட்டுச் சென்றபோது 8,000 போலீசும் 'பாதுகாப்பாக'ச் சென்றது. இப்படி நடப்பதை அறிந்துகொண்டே 'போலீஸ் பாதுகாப்பே அனைத்துக்கும் மருந்து' என்பது ஏமாற்று, மோசடி.

இவை தீர்வல்ல என்றால் வேறென்ன தீர்வு?

★ மக்களே இன்று கோருகின்றபடி மத ஊர்வலங்களைத் தடை செய்ய வேண்டும்.

★ மதவெறியை எங்கே குறிவைத்து வளர்க்கிறார்களோ அங்கே மக்கள் மத்தியிலிருந்தே தெருக்களில் மக்கள் கமிட்டிகள் உருவாக்கப்படவேண்டும். இவர்களின் ஊர்வலத்தை எதிர்த்து 'உள்ளே வரவிடமாட்டோம்!' என்று மக்களே உறுதி ஏற்று மறித்து நிறுத்த வேண்டும். மதவெறியர்களை அப்போதைக்கப்போதே அம்பலப்படுத்த வேண்டும்.

★ 'நாங்கள் சிறுபான்மை, அதனால் காப்பற்றுபவர்களை நம்புகிறோம்' என்று முஸ்லீம்கள் தங்களுக்குள்ளே உள்ள மதவெறியர்களை நம்பி தஞ்சம்புகக்கூடாது. இதனால், தங்களை அறியாமலேயே இந்துமத வெறியினரை எதிர்க்கும் ஜனநாயக சக்திகளை வலுவிழக்கச் செய்து, ஆர்.எஸ்.எஸ்ஸுக்குப் பலம் சேர்த்துவிடுகிறார்கள், முஸ்லீம் மதவெறியர்களைப் பார்த்து ரவுடிகளைப் பார்ப்பது போலப் பயப்படுகிறார்கள் - ரவுடிகளை வளர்ப்பதும், மதவெறியர்களை வளர்ப்பதும் அபாயமானது.

★ தாழ்த்தப்பட்டோரை அடியாள் கும்பலாக ஆர்.எஸ்.எஸ்.சேர்க்கிறது. பிற்படுத்தப்பட்டவர்கள் அதில் சேரவில்லை என்று சொல்வது ஆறுதல் அல்ல; பிற்படுத்தப்பட்டவரிடையே முற்போக்கானவர்கள் தங்கள் சாதி மனப்பான்மையை கைவிட்டு தாழ்த்தப்பட்டவரிடம் இறங்கி வேலை செய்ய வேண்டும்; பிற்படுத்தப்பட்ட சாதிகளிலேயே மேல்நிலைப்பகுதி ஆர்.எஸ்.எஸ்.-யோடு குலாவுகிறது - அவர்களை அம்பலப்படுத்த வேண்டும்.

திருவல்லிக்கேணியில் நடந்து முடிந்திருப்பது இந்துமத வெறிப்பாசிசத்தின் வெறிக்கூத்தும் அதன் எதிர்விளைவும்தான். ரத்த ஆறு ஓடுமுன்னால், ரத்தக் கவிச்சு வீசுமுன்னால், தமிழகத்தை மீட்போம்! இது அவசரப்பணி!

—க.மு

படிப்பகம்

www.padippakam.com

## ஜெயா விஜயம் - திருச்சி ம.க.இ.க. எதிர்ப்பியக்கம்!

திருச்சியில் ஜெ 15.9.92 அன்று அண்ணா பதக்கம் வழங்கும் விழாவிற்கு ஜெயலலிதாவின் வருகையையொட்டி திருச்சி நகரில் எங்குபார்த்தாலும் அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், துதிபாடிகளின் விளம்பரங்கள், அலங்கார ஜோடனைகள், அண்ணா ஸ்டேடியம் பகுதியில் கெடுபிடிகள்! பத்தாயிரக்கணக்கான போலீசு தமிழகமெங்கும் இருந்து குவிக்கப்பட்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் 'ஜெ'வை எதிர்த்து ஒரு சிறு குரல் எழுந்தாலும் சும்மா இருக்குமா போலீசு? அதுவும் தங்களது 'சேவையை'ப் பாராட்டி முதல்வரே பதக்கம் வழங்கும்போது அதை எதிர்த்து குரலா?

கெடுபிடிகளையெல்லாம் மீறி 'ஜெ'யின் வருகை மற்றும் பதக்கம் வழங்கும் விழாவை எதிர்த்து மக்கள் கலை இலக்கியக் கழகம் எழுச்சியான சுவரொட்டி இயக்கம் மேற்கொண்டது. பேருந்துகள் ஜெயாவின் புகழ்பாடும் சுவரொட்டிகளைத் தாங்கி வரும் முன்னரே - 14.9.92 அன்று காலையிலேயே ம.க.இ.க.-வின் எதிர்ப்புச் சுவரொட்டிகளைத் தாங்கி வந்தன. சொரணையுள்ளவர்கள் மகிழ்ந்தனர்; துதிபாடிகள் புழுங்கினர். ஜெயாவை எதிர்த்து சுவரொட்டிகள் வருமென்று போலீசும் நிர்வாகமும் முன்னரே எதிர்பார்த்தது. இதற்கென்றே போலீசாரை ஒதுக்கி பேருந்துகளில் ஒட்டியிருந்த சுவரொட்டிகளைக் கிழித்தனர். இருந்தாலும் பகல் 12 மணிவரை எதிர்ப்பு முழக்கங்கள் நகர் எங்கும் வலம் வந்தன. பகல் முழுதும் முயன்றும் சில பேருந்துகள் போலீசாரை ஏமாற்றிவிட்டன. பேருந்து நிலையத்தில் ஒட்டியிருந்த சுவரொட்டிகளையும் விடாமல் போலீசார் மேய்ந்துகொண்டிருந்தனர். மேலும் கீரனூர் / பொன்மலைப்பட்டி வழித்தடங்களில் விழா மைதான வழியே ஓடிய பேருந்துகளில் சுவரொட்டிகள் இருந்ததை 'கியூ' பிரிவு போலீசார் புகைப்படம் எடுத்து சம்பந்தப்பட்ட ஓட்டுநர் / நடத்துநர்கள் மீது நடவடிக்கை எடுக்க நிர்வாகத்திற்கு தூது சென்றனர். சம்பந்தப்பட்ட ஓட்டுநர் / நடத்து னர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்.

ம.க.இ.க. தோழர்களின் புகைப்படங்களை வைத்துக்கொண்டு அவர்களைக் கைது செய்ய நாயாய் அலைந்தது 'கியூ' பிரிவு போலீசு. 14.9.92 நள்ளிரவு 12 மணிக்கு செயலர் முத்துவின் வீட்டிற்குச் சென்று அவரைத் தேடினர். சிவில் உடையில் முகமூடி கொள்ளையரைப் போல சென்றுள்ளனர். தோழரின் மனைவி கதவைத் திறந்தவுடன், தாங்கள் திருட்டுத்தனமாக வந்ததை யாரும் பார்க்கக் கூடாது என்பதற்காக விளக்கைப் போடாமல் பேசச் சொல்லியுள்ளனர். முத்து அங்கு இல்லாததால் மற்றவர்களை விசாரித்துள்ளனர். காந்திபுரம் பகுதிக்குச் சென்று அங்கு தூங்கிக் கொண்டிருந்த ம.க.இ.க. தோழர்கள் கபிலன், ரவிச்சந்திரன் இருவரையும் கைது செய்து உறையூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இங்கு நள்ளிரவு கைது நடக்கும்போதே நகரின் மற்ற பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுவிட்டதால் மறுநாள் காலை நகர் முழுதும் ஜெயா எதிர்ப்புச் சுவரொட்டிகள் பளிச்சிட்டன.

கைது செய்யப்பட்ட தோழர்கள் உறையூரிலிருந்து கண்டோன்மென்ட் காவல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு, ஆபாசமாக அரசுத் தலைவரை விமர்சித்தல், மற்றும் பிற பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து திருச்சி கிளைச் சிறைச்சாலையில் அடைத்தனர். 16.9.92 அன்று ஜாமீனில் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறிய முணுமுணுப்பைக்கூட நசுக்கிவிட வேண்டுமென வெறிகொண்டலைந்த ஜெயாவின் போலீசுக்கும் துதிபாடி கூட்டத்திற்கும், சுவரொட்டிகள்தான் என்றாலும் அவையே செவுளில் அறையாக இறங்கின.

### செருப்பு விஜயம்

வழிவிடுங்கள்
வருகிறது செருப்பு

இனி வரும்
இராமனின் பாலாடை
மேலாடை
கிலுகிலுப்பை
கோவணம்...

சம்புகனின் சாம்பல்?

வராது
வரலாற்று வழிநெடுக
வள்ளல்களின் கும்பர்கள்தான்
அஞ்சத் தேவையில்லை
அருமை இந்துவே.

அதோ... அதுதான்
கோசலை மைந்தன்
கைவிரல் சூப்பிய இடம்

இதோ...
அன்னவளை
அண்ணல்
நோக்கிய இடம்
இது
நுகர்ந்த இடம்.

இருக்கட்டும்.
குகனுடைய குடிசை?

அங்ஙனம் ஏதுமில்லை
அய்யன் திருவடி நிழலே
அவனுக்குச் சொந்தம்.

கைவண்ணம் கண்டோம்
கடப்பாரை சேவையிலே
கால்வண்ணம் காட்டப் - புதுக்
காலணிகள் வருகிறதோ?

அய்யன் பாதத்தின்
அளவென்ன அறிவீரா?

அளவை அறிந்து
ஆவது என்ன?
அரசுகள் மாற
அளவுகள் மாறும்
அன்றும் இன்றும்
ஆள்வது செருப்பே!

வழிவிடுங்கள்
வருகிறது செருப்பு!

துரை.சண்முகம்

### தோழர் துரை. சண்முகம் - ஷீலா புரட்சிகர மணவிழா

காதலும் மணமும் சமூகப் போராட்டத்தின் அங்கமே என்ற அனுபவத்துடன் தோழர் துரை. சண்முகம் - ஷீலாவின் வாழ்க்கை ஒப்பந்த விழா 23.7.92 அன்று மாலை 5 மணியளவில் குடந்தை பெரியார் மாளிகையில் நடைபெற்றது. சாதியையும், சடங்கையும், சீர்வரிசைகளையும், ஆணாதிக்கத்தின் சின்னமான தாலியையும் நிராகரித்த இந்த விழா, எளிமையையும் புதுமையையும், புத்துணர்ச்சியையும் பகிர்ந்து கொண்டது. தஞ்சை ம.க.இ.க. செயலர் தோழர் காளியப்பன் தலைமை தாங்க, மாநிலச் செயலர் தோழர் மருதையன் சிறப்புரையாற்ற, திரண்டிருந்த உறவினர்கள் நண்பர்கள் வாழ்த்துக்கூற பழமைக்கு எதிராக ஆரவாரமில்லாத கலகமொன்று அன்று அரங்கேறியது.

படிப்பகம்

www.padippakam.com



# உருமாற்றம்

துரை. சண்முகம்

"யப்பா குச்சு வாங்க காசு குடு"

"குச்சிய தின்றியா, நேத்துதான வாங்குன"

'இல்லப்பா எழுதுனேன் போச்சி'

'ஒன் வயசுலயே எனக்கு காது குத்தி கலிய பெருமா கோயிலுக்கு மொட்ட போட்டாச்சி, புளுவாத ... எங்காவது போட்டுட்டு இதே வேல. நீ படிக்கிற படிப்புல அமயஞ்ச மயத்துல ராயர் குடுக்குற டீத்தண்ணி காசும் தங்க மாட்டேங்குது. இந்தா... பாத்து ஒரமா போவுணும்',

"வர்ரம்ப்போ..."

புத்தகப்பையை தோளில் போட்டுக் கோண்டு, குச்சி டப்பா குலுங்க ராசு நடந்து போகும்போதெல்லாம், மகனின் படிப்பழகைக் கண்டு சின்னப்பாவுக்கு, கண்ணும், மனசும் நிறையும்.

"பாருடி புள்ளைய என்னவா படிக்கப் போறான், நான்தான் நாலு எழுத்து படிக்காம, ஊரச்சுத்தி திரிஞ்சுட்டு தோட்டக்காரனாயிட்டேன்.. அவனாவது பெரிய படிப்பு படிச்சு பேனா புடிக்குற வேலைக்கு போவட்டும். கடன, ஒடன வாங்கி படிக்க வக்கினும்".

"ஆமாம், உன் அப்பன் ஜில்லா கலெக்ட்டரு. நீ முனுசீப்பு"வாங்குற காசுல பெரிய படிப்புக்கு அனுப்பப்போற..

"ஏன் முடியாதா, இந்தாட்டிலேந்து பெரியய்யா கள நெல்லு கூட தர்ரேன்னு சொன்னாரு. தெனம் ரண்டுருவாவும் தர்ரேன்னாரு. என்னத்த செலவு நமக்கு. தோட்டத்து கீரைய ஆஞ்சி தின்னாலே பொழுது ஓடிடும்"!

"அய்ய .. நீ கருவாட மீனாக்குற ஆளுல்ல.. செஞ்சாலும், செய்வ. உங்கூட பேசிட்டிருந்தா பொழுது மூங்கிடும் போ கெடக்கு"...

இருபத்தைந்து வருடத்திற்கு முன்பு கொண்டல் ராயர் தோட்டத்தில் கூலி வேலைக்குச் சேர்ந்தான் சின்னப்பா. படிப்படியாக பதவி உயர்வு பெற்றது போல இன்று ராயர் தோட்டத்துக்கு தோட்டக்காரன், மராமத்து எல்லாம் அவன்தான். மரம், மட்டைகளுக்காவது நெஞ்சில் ஈரமுண்டு. கொண்டல் ராயர் கோவணத்தை பட்டில் கட்டினாலும், மனனெனவோ மர அழுக்குதான். அவசரத்துக்கு அஞ்சு, பத்து கேட்டால் கூட, "இப்பதாண்டா கோனாருக்கு கொடுத்தேன்.. நாளைக்கு பேங்குல போயிதான் என் செலவுக்கே பணம் எடுக்கனும்," என்று புளுகுவதில் புராணங்களை மிஞ்சிவிடுவார்.

சிந்தித்து வெறுக்கிற அளவுக்குக்கூட சின்னப்பாவுக்கு சூதுவாது தெரிவதில்லை. பொழுதுக்கும் தோட்டத்திலேயே வியர்வை பாய்ச்சுவான்.. 'இந்தமரம் சோகை, இது தூங்குது - வயிரம் பாஞ்சது' இப்படி பார்த்த மாத்திரத்திலேயே ..மரங்களை சொல்லுமளவுக்கு மனிதர்களை வகைபிரிக்க தெரியாத ரகம் சின்னப்பா.

ஒரு மைல் சுத்தளவுக்கு தோப்பு .. அவ்வளவும் அவன்தலையில். மூங்கி புத்தோரம் தான் காவிரியாறு. அதை காவிரி என்றால் நம்பமுடியாது. திருச்சியில் அதன் அகன்ற பரப்பையும், அழகையும் பார்த்தவர்க்கு... கும்பகோணம் தாண்டிப் பார்த்தால் தெரியும்... வேலிமேல் காயும் சின்னப்பாவின் பழுப்பு வேட்டி போல கசங்கிச் சிறுத்துக் கிடக்கும்.

"யப்பா பள்ளிகூடத்து சோறுல பூச்சி இருந்திச்சி",

"வண்ட்டியா ராசா .. ஒக்காருடா",

நல்ல அரிசியை விற்றுவிட்டு தினம் புளுத்த அரிசியை வாங்கி தின்னும் சின்னப்பாவுக்கு அது பெரிய இடியாகப் படவில்லை போலும்!

"இன்னிக்கு படிச்சத சொல்லு"

"இன்னிக்கு கடசி கிளாஸ் தோட்ட சாரு வந்தாரு, நீ செய்விய அத போல.. தண்ணி ஊத்தச் சொன்னாரு", சின்னப்பாவின் கனவை கலைத்ததுமாதிரி இருந்தது. ராசும் தன்னைப்போல தோட்ட வேலைக்கு ஒத்திகை பார்ப்பது கட்டுக்கடங்காத கோபத்தை கிளப்பியது.

"படிக்கவுட்டா..புல்லு புடுங்கவா போற... போய் படிடா... நாயே"

அதட்டலோடு, அடியும் விழ ராசு தேம்பினான்.

"தே உனக்கென்ன மூளை பிசகிடுச்சா.. பள்ளிகூடம்னா நாலுந்தான் உண்டு.. நீ முன்ன பின்ன போயிருந்தால்ல அருமை தெரியும். வாய மூடுவியா.. பெரிசா அரற்ற.. புள்ள செதும்புறான்.. நீ வாடா ராசா..."


படிப்பகம்

www.padippakam.com

''என்னத்த தேடி இங்கே
வந்துச்சோ பூங்குருவி
இளப்பாற எடமில்ல
ஏங்குதோ என்குருவி
தேனெடுக்க ரெக்ககட்டி
தேடி வந்த தேன்குழவி
நானிருக்கேன் ஏங்காதே
நல்லதா விடியுமிங்கே...''

பரம்பரைப் பாட்டு மாதிரி சோகம் வந்தால் பஞ்சவர்ணம் பாட ஆரம்பித்து விடுவாள். ராசுவுக்கு அர்த்தம் புரிகிறதோ இல்லையோ.. அம்மாவின் சோகம் மட்டும் மனதில் பதிய ஏக்கமாய் பார்த்தான்.

''என்ன பாட்டும்மா இது''

''ஊம், நான் சின்னதா இருக்கப்ப எங்க ஆயி பாடும் - நீ படி, வீட்டுப்பாடம் இருந்தா எழுது ராசு''.

● ●

''கேட்டு தொறப்பா''

''கேட் பாஸ் கொடுங்க''

''மாமோவ் 'கேட் பாஸ்' வாங்கினியா''

''ச்சோ... மறந்தே போச்சுப்பா...'' டிரைவர் தலையை சொறிந்து கொண்டே அடித்துக் கொண்டான்.

''சரி மாமா... செக்யூரிட்டிக்கிட்ட சொல்லிட்டு வா போலாம்''

''தா பாருப்பா... 'பாஸ்' மறந்தாச்சு அடுத்த லோடு வர்றப்ப வாங்கி தந்துட்றேன்.''

''நான் என்ன பண்றது... போயி வாங்கிட்டு வந்துடுங்க, எங்கிட்ட பாஸ் கேப்பாங்களே''

''என்னம்மா ரொம்ப காட்ற.. நான் சொல்லிகினே இருக்கேன் பெர்சா பேசுற.. அப்படியே பொயிடவா போறோம், அடுத்த லோடுல தர்றேன்னு சொல்றன்ல, இப்ப போனா அந்த கிளார்க்கு வேற கத்துவான்யா... லொள்ளு புடிச்ச மன்சன்''

''சொல்றது புரியாம நீ பேசிகிட்டே இருக்க எஸ்.ஓ.. பாத்துகிட்டு இருப்பான், பாஸ் செக் பண்ணா நான் என்னயா பண்ணுவேன்? என் பொழப்பு போயிரும்.''

''பெரிய்ய இவுரு... துண்டு பீடிக்கு ஏங்குற பயலுக... எங்களுக்குத் தெரியாதா? சட்டைய போட்டுட்டா கம்பெனிக்கே இன்சார்ஜ்னு நெனப்பு இவனுங்களுக்கு''.

டிரைவரும் தனக்கே உரிய பாணியில் பீடி புகைய, புகைய எரிச்சலைக் கொட்டினான்.

''...த்தர... எங்களையே போக்கு காட்றியா. இர்றா கண்டுக்கறேன்'' கேட்பாஸை வேகத்தில் எறிந்தான் கிளீனர்.

''என்னடா கெடக்கு கெடக்குன்னா ரொம்ப ஏர்ற... நாங்க ஒன்னும் சோமாறி கெடையாது வாடா ரெண்ட்ல ஒன்னு பாத்ருவோம்...''



ராசுவும் தன்னைப்போல
தோட்டவேலைக்கு
ஒத்திகை பார்ப்பது
சின்னப்பாவுக்கு
கட்டுக்கடங்காத
கோபத்தைக் கிளப்பியது.
''படிக்கவுட்டா
புல்லுபுடுங்கவா போற...
போய் படிடா நாயே''
அதட்டலோடு
அடியும் விழ
ராசு தேம்பினான்.

''மாமோவ்.. எடு அந்த வீவர...''

''யோவ் ராசு... ஸ்டுபிட்! இந்தாண்ட வாய்யா. லாரி நீ போயா...''

''உனக்கு அறிவிருக்கா... லாரிகாரங்கிட்ட போய் சண்டை போட்டுகிட்டு... உன் டூட்டிய பாரு மேன்... கம்ளெய்ண்ட்னா என்கிட்ட சொல்லியா... கத்துற... சே! கண்ட்ரோல் இல்லாம போனா என்னய்யா அர்த்தம்?''

அடிமுட்டாளின் அறிவுரையாய் ராசுவுக்கு கசந்தது. 'தன்மானம் போனா கூட... அடுத்தவங்கிட்டதான் கம்ளெய்ண்ட் பண்ணனுமா? சே... என்ன மானங்கெட்ட பொழப்பு...!' மனசு பற்றி படர்ந்தது.

படித்து முடித்து, வேலைக்கு போயி... தெக்குத்தெரு ஆபீசர் மாதிரி... என்னனென்னவெல்லாம்... கனவுகளை சொந்த பூட்ஸ் கால்களுக்கடியில் மிதித்து ஒழித்தது போல ஏ.எஸ்.ஓக்கு சல்யூட் வைத்தான். இந்நேரம் அப்பாவாயிருந்தால் தப்பு தன்மேல் இல்லை என்றால் மம்புட்டி காம்பை கழட்டி இருப்பார்.

தோப்பில் மரமேறுபவர்களிடம் அவர் குழைய குழைய பேசுவதும், 'யோவ் கொஞ்சம் பொவையல குடுய்யா' என்று உரிமையோடு பழகுவதும் புழுதிபடிந்த கிராமத்து சுவாசமும், புகை சூழ்ந்த நகரத்து சுவாசமும் ரொம்ப வித்தியாசப்பட்டிருப்பதை ராசுவால் வகைபிரித்து வாழ முடியவில்லை. சேணம்பூட்டி லகானை கையிலெடுத்த குதிரைபோல மனசு மட்டும் நகரத்தை விட்டு விலக காத்திருந்தது அவனுக்கு. அனுதாபப் படக்கூட ஒரு ஆளில்லாமல்... ஒண்டியாய் மொட்டைமாடி கொட்டகைவீட்டுவழியே வானம் பார்க்க நிலவைச் சுற்றிய நட்சத்திரங்களின் முணுமுணுப்பு ஏக்கம் தந்ததுபோல்... வெறித்தான்.

● ●

''ராசு ஹாயா பேப்பர் படிச்சிட்டு இருக்க ''ஏய்.. டூட்டி முடிஞ்சு ஓர்க்கர்ஸ்லாம் வர்ற நேரம். பேப்பர மூடுடா ஏ.எஸ்.ஓ. பார்த்தா சத்தம் போடுவான்''

''அவன் கெடக்குறான், மொதல்ல இந்த வேலைய மாத்தணும், அதுக்குதான் பேப்பரை பாக்குறேன் ஒன்னும் தேறல''.

''ராசு நீ பி.ஏ. படிச்சிருக்கலாம். அனுபவஸ்தன் நான் சொல்லுறத கேளு; இருக்கறத விட்டுட்டு பறக்குறத பாக்காதப்பா, மெட்ராஸ்லேயே செக்குருட்டி வேலை மட்டுந்தான் எட்டவரு டூட்டி, மாசம் ஆறுநூறு தர்றான். வேற எங்க போனாலும் பாரவண்டி இழுக்குற மாதிரிதான், அதுவும் பத்து, பன்னெண்டவரு வேலதான்.'

''ஆமாம், ஓவர் டைம் அது இதுன்னு பாத்து வாங்குற எட்டு நூறுல.. யூனிபார்ம் அயன் பண்றதுக்கும் பஸ்சுக்குமே, போவுது. அதுவும் பூட்சுக்கு பாலிஸ் இல்லேன்னா இந்த ஏ.எஸ்.ஓ கத்றான். நைட் டூட்டி பாத்துட்டு காலைல தண்ணிக்கு போனா தோள் கழலுது. தனியா பொங்கி தின்னு... கடன வாங்கி.. வெறுத்துடுச்சு பெரிசு''.

''கொஞ்ச நாள் வெயிட் பண்ணுப்பா.. வேற வேல கண்டுக்கினா இத்த அப்பால விடேன்

படிப்பகம்

www.padippakam.com

''பெரிசு ஒரு நூறு இருந்தா தாயேன் அஞ்சாந்தேதி தரேன்''

''அட போப்பா.. நானே பீடி வாங்க கூட துட்டு இல்லாம லோல்பட்றேன், எங்கிட்ட இப்பேதுப்பா, நானும் அஞ்சாந்தேதி கேஸ் தானே.. சரி பீடி கீதா..''

''இதா''

பீடிப் பழக்கம், ராசுவுக்கு வந்த புதுசில இல்லை. அதெல்லாம் தப்புன்னு பஞ்சவர்ணம் சொல்லி வைத்திருந்தாள். ஒரு முறை பூவரசு இலையை பீடி மாதிரி சுருட்டி வாயில் வைத்து ஊதிக்காட்டி அம்மாவிடம் அடிவாங்கியதை 'பெரிசு' வரை சொல்லி சிரித்தான்.

'செக்கூருட்டியின்னா கை, கால் மட்டும் போறாது, கட்டாயம் பீடியும் வேணும்னு சட்டமா..' என்று பெரியவரை பார்த்து வசனம் பேசியவன்.. இப்போது வெறுமையில் மனம் புகைவது பொறுக்காமல் புகைத்துப் பார்ப்பதில், வெறுப்பை ஊதித்தள்ளுவது போல் ஒரு சுகம்.

சற்று மறந்து இருந்தால் கம்பெனிக்குள் லாரிக்காரர்கள் 'பீடிக்கீதா' என்று கேட்டு இல்லை என்றாலோ இரத்த ஓட்டம் நின்று போனது மாதிரி பார்க்கின்ற தோரணை பாவமாயிருக்கும். பீடியின் பிறவிக்குணம் யாரை தான் விட்டது? தொழிலாளிகள் மத்தியில் அது ஒரு தவிர்க்கவியலாத பண்பாட்டு சாதனமாக ஆனபின்பு ராசுவும் அதற்கு உட்பட வேண்டியதாயிற்று.

செக்யூரிட்டி வாசலை தாண்டுபவர்களை கொஞ்சம் நில்லுங்க என்றாலே போதும். 'தடவிக்கோ' என்று எரிச்சலுடன் ஒர்க்கர்ஸ் உதிர்க்கும் வார்த்தையில் பல பொருள் கனன்றிருக்கும். சடங்குக்காக சட்டை பைகளை தடவினாலும் தூரத்திலிருந்து பார்க்கும் போதே எதிரியை பார்ப்பது போல வெறுத்து ஒதுக்குவது, ராசுவுக்கு சம்பளத்துடன் சலிப்பையும் கொடுத்தது. நினைக்க, நினைக்க வெறுப்பு மேலோங்கியது.

'பேருதான் செக்குருட்டி.. தமிழில சொன்னா பாதுகாப்பு - காவல்தா. அப்பாவ ஏமாத்திட்டோம், அப்பா மாதிரி அதே அடிமை வாழ்க்கை,' சிந்தனை சூடேற அரை மணியில் நாலு பீடி மூச்சு முட்டி விழுந்தது.

தோப்பில் வந்து சுள்ளி பொறுக்குபவர்களை கூட சின்னப்பா அதட்டி பேசுவதில்லை ''போ... போ அய்யா பாக்றாரு' 'ன்னு இரக்கத்துடன் அதட்டல் வரும், கால் சட்டை நழுவி விழும் வயது. அரைஞாண் கொடியில் இறுக்கி முன்பக்கம் முடிச்சு போட்டுக்கொண்டு மாமரத்தில் ஏறிவிட்டான் ராசு. தெற்குத்தெரு காளி, சுப்பு, முனியன் எல்லா பசங்களும் 'டேய் உலுக்குடா மே கெளைய உலுக்கு' என்று ஆர்ப்பரிக்க 'பயமாருக்குடா' விழி பிதுங்கினான் ராசு. ''ஏய் உன் அப்பர்ருதான... என்ன பயம், உலுக்குடா..

அறிவுரை வலுப்பெற கைகொண்ட மட்டும் தாவி உலுக்கினான், மாமரம் பிஞ்சாய் சிரித்து சிதறியது. தோப்பு கடைசியில் மூங்கில் வெட்டிக் கொண்டிருந்த சின்னப்பா அரிவாளை ஓங்கியபடி ''டேய் யாருடாது களவாணிங்களா தோ வாரேன்'' ஓடி துரத்த, சுப்புவும் காளியும் ஆடிகாத்தாய் ஆளைக் காணோம். முனியன் இடறி விழுந்து செருமினான்.

''படுவா திருடியா தீனி கேக்குது இதா ரெண்டு; இனி திருட கூடாது போ'', மிரட்டுவது போல அறிவுரை சொன்னான் சின்னப்பா.

'நல்ல பயலுவ நாலுகால்ல ஓடிட்டானுவ' என்று மடியில் வெற்றிலை பொட்டலத்தை அவிழ்க்கையில்தான்... மரத்திலிருந்து கால் சட்டை ஒன்று விழுந்தது. 'என்னடா இது மரம் காய்தான் காய்க்கும் கால்சட்டையும் காய்க்குதா... எவன்டாது எறங்குடா படுவா'.

''அப்போவ்... அடிக்காதப்பா...'' அழுது கொண்டே முண்டக்கட்டையாய் மரமிறங்கிய நினைவுகள் மின்ன இயந்திரத்தோடு இயந்திரமாய் வாழ்க்கை கசந்தது.

''எனக்கு இந்த வேல கொஞ்சங்கூட புடிக்கல பெரிசு, ஊர்ல எங்கப்பாவும் காவக்காரு தான்.. இந்த மாதிரி கூடவேலைக்கு வந்தவங்களை சந்தேகமா பாக்குற நிலம கிடையாது. சும்மா இருக்குறவனையும் சட்டைய தடவி சண்டைக்கு கூப்புடற மாதிரி என்ன உத்தியோகம் இது. அடுத்தவனோட வெறுப்ப சம்பாதிக்காத வேலையா இருக்கணும்.''

''இன்னா நீயி உங்கப்பா மாதிரி பண்ண வேல்ல தேவலான்றியா?''

> சும்மா இறக்குறவனை
> சட்டையைத் தடவி
> சண்டைக்கு
> கூப்புடுறமாதிரி
> என்ன உத்தியோகம் இது!
> அடுத்தவனோட
> வெறுப்ப சம்பாதிக்காத
> வேலயா இருக்கணும்

'இங்க மட்டும் என்ன வாழுது.. அவுருக்கு பழுப்புவேட்டி எனக்கு காக்கி சட்டை அவ்வளவுதான் வித்தியாசம்... ஆனா என்ன மாதிரி தூர ஒதுக்குனாப்ல கெடக்கமாட்டாரு. தனியா வாழ்ந்து கடன்தான் பாக்கி... என்னால இருக்க முடியல பெரிசு... அடுத்த வாரம் சம்பளத்த வாங்கிட்டு ஊருக்கு போயிடலாம்னு முடிவு பண்ணிட்டேன்...''

● ●

''என்ன பெரிய ரோசன, கூப்பிடறதுகூட காதுல கேக்காம''.

''ஊம். சரி பஞ்சவர்ணம் நாம பேசாம ராசுவோட பட்டணமே போயிடலாமா... எனக்கும் முன்ன மாதிரி உடம்பில்ல; பத்து கீத்து மொடையிறதுக்குள்ள இன்னிக்கு முதுவு முறிஞ்ச மாதிரி இருக்கு. ராசுதான் மெட்ராஸ்ல எட்டுநூறு வாங்குறதா சொல்றான்.. மாசம் எரநூறுவா இங்க அனுப்பறத... நாம அங்கேயே போயிட்டா கூழோ, கஞ்சியோ சேந்து குடிக்கலாம்... பொழுதன்னிக்கும் பண்ணையில மாஞ்சி மாஞ்சி என்னத்த கண்டோம்...''

''எனக்குந்தான் ஆச... இந்த மண்ணவுட்டு போயி அங்கெல்லாம் பொழப்பு ஓடுமா...''

''நாமென்ன மரங்கொடியா மண்ணவுட்டு போனா சாவ? இல்ல இந்த மண்ணுலேயே மக்கிப்போவணும்னு ஆத்தாதான் பெத்து போட்டாளா... நமக்குன்னு ஏதுடி மண்ணு... நீ போயி தேவராசு பயல கூப்பிடு. கடுதாசி எழுதச் சொல்லுவோம்.''

'தேவராசு நல்லா கோருவையா எழுது.'

''மவன் ராசுக்கு.. சின்னப்பா எழுதுறது. நானும், ஆத்தாவும் உன் நெனப்பாவே கெடக்கோம். எனக்கு இங்க வேலை புடிக்கல. முன்ன மாதிரி உடம்பும் முடியல. நீயும் தனியா கெடந்து கஷ்டப்படுற, நானும், ஆத்தாவும் பட்டணமே வரலாம்னு ரோசன பண்ணோம். சரியா பட்டுச்சு. வயசான காலத்துல.. ராயரும் துரத்துவாரு போல இருக்கு. இங்க சாகறத பட்டணத்துல ஏதாவது பாடுபடலாம்னு ஆத்தாளும் சொல்றா.. தாயா, புள்ளையா சேர்ந்து இருப்போம். உன் கடுதாசி பாத்து வாரோம். பதில் போடு...''

தொண்டைக்குள் மீன்முள் தைத்த மாதிரி படித்தவுடன் விக்கி நின்றான் ராசு. சுவர்ப்பந்தாய் வாழ்க்கை அல்லாடுவது இனம்புரியாத கோபத்தை கிளறியது. 'என்ன பதில் எழுதுவது?' குழம்பி தவித்தான். 'வரவேண்டாம்' என்று எழுத தன்மானம் தடுத்தது. 'வரச்சொல்ல' வருமானம் இடிக்கிறது. எழுத எடுத்த காகிதம் இரைப்பையும் இதயமுமாய் மாறி, மாறி கேள்வி கேட்டது. ●



படிப்பகம்

www.padippakam.com



## ரோஜா:

# அரசாங்க செய்திப்படம்!

சலிப்பூட்டும் இன்னொரு சுதந்திர தினத்தின் காலைத் தினசரியை மூன்றாவது முறையாகப் புரட்டிக் கொண்டிருந்தபோது முகமூடி அணிந்து ஏ.கே.47 ஏந்திய மணிரத்னத்தின் 'ரோஜா' கண்ணில் பட்டது. இரவுக்காட்சிக்குச் சென்று திரும்பியவுடன் இரவோடிரவாக கண்டன அறிக்கை தயாரித்து, எதிர்ப்பு இயக்கம் எடுக்கவும் ஏற்பாடு செய்யுமளவுக்கு சுதந்திர தினச் சோம்பல் பறந்தோடிவிட்டது.

கதை அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அப்படி ஒன்று இருந்தால், முதல்வர் ஜெயலலிதாவுக்கு விசு - ஜிவியின் காணிக்கை 'நீங்க நல்லாயிருக்கணும்'. 'எதிர்கால பிரதமர்' அத்வானிக்கு மணிரத்னம் - பாலசந்தரின் காணிக்கை 'ரோஜா'

ஒரு கிராமத்து பொண்ணைத்தான் கலியாணம் பண்ணுவேன்னு ஒத்தக்கால்ல நின்னு பொண்ணு பாக்க வர்றாரு ஒரு சிவப்பான, லேசா மூஞ்சி உப்பின, கம்ப்யூட்டர் எஞ்சினியரு - (பரவாயில்லையே). ஆனா அந்த பொண்ணு ''நான் முறைமாமனைத்தான் கட்டுவேன்னு அந்த பட்டணத்து மாப்பிள்ளை கிட்டேயே சொல்லிப்படறா - (அடிப்பாவி). அவனும் இதை வெளியில சொல்லாம (எவ்ளோ நல்ல மனுசன்) தங்கச்சிகாரி 'ரோஜா'வைத்தான் புடிச்சிருக்குன்னு சொல்ல, தங்கச்சிக்கா அவன்மேல கோவமான கோவம் (ஐயோ பாவம் அந்த பையன்). ரெண்டு பொண்ணுங்களுக்கும் கலியாணம் நடந்து முடியுது; ரோஜா அந்த பட்டணத்து புருசன்காரன பக்கத்துலயே நெருங்கவுட மாட்டேங்குறா; அவனும் வெளியே சொல்லாம புழுங்குறான் (தங்கமான பையன்பா). அப்புறம் அக்கா மூலமா உண்மை தெரிஞ்சவொடனே ரோஜா அவன்கிட்ட மன்னிப்பு கேட்டுட்டு ரெண்டு பேரும் டூயட் பாடுறாங்க (ஹப்பா - அப்புறம்?)

அப்புறம் காஷ்மீர்ல யாரோ தீவிரவாதிங்களாமே, அவங்கள அடக்க நம்ம ராணுவத்துக்கு உதவி பண்ண ரோஜாவையும் கூட்டிகிட்டு காஷ்மீருக்கு போறான் மாப்ளை பையன்; (எது? ''காஷ்மீர் ப்யூட்டிபுல் காஷ்மீர்''னு எம்ஜியார் பாடுவாரே அந்த காஷ்மீரா?) அதுதான். அங்க போய் ஒரு டூயட்டு (சீனெல்லாம்அருமையா இருக்குமே)

ரோஜாவுக்கு ஒரே சந்தோஷம். ரெண்டு பேரும் மனசு ஒப்பிப் போனதுக்காக சாமிக்கு தேங்காய் ஒடைக்க தனியா கோயிலுக்கு போறா (முருகா... நல்ல பொண்ணு). எங்கடா பொண்டாட்டிய காணோமேன்னு புருசன்காரன் தேடிகிட்டு வரும்போது... (வரும்போது) கோயில் வாசல்ல அவள பாத்துட்டான். அந்த நேரம் திடீர்னு தீவிரவாதிங்க வராங்க (ஐயய்யோ) கோயில் வாசல்லியே அவனை கடத்திகிட்டு போறாங்க. (அடப்பாவிங்களா... கோயில் வாசலிலேயா) அப்புறம் அந்தப் பொண்ணு பாஷை தெரியாத ஊர்ல தன்னந்தனியா சத்தியவான் - சாவித்திரி மாதிரி போராடி அந்த கொலைகாரன்க கிட்டயிருந்து புருசனை எப்படி மீட்கறாங்குறதுதான் கதை.

மணிரத்னத்தின் வார்த்தைகளில் சொன்னால் ''அங்க காஷ்மீர்ல ஏதோ எல்லைப் பிரச்சினை இருக்காம்பா என்று மேலோட்டமாக'' ஒதுக்கித் தள்ளும் தேசிய உணர்வில்லாத, பொறுப்பில்லாத, முட்டாள் தமிழர்களுக்கு கொடுக்கப்பட்ட ''தேன் தடவிய மாத்திரை'' தான் ரோஜா. வருடம் பூராவும் சென்டிமென்ட் தேனைக் குடம் குடமாகக் குடித்து குரங்காகிப்போன ரசிகப் பெருமக்களை இடைவேளை வரை தேனிலேயே மூழ்கடித்து, பிறகு ''காஷ்மீர் தீவிரவாதத்தின் உக்கிரத்தை''ப் பற்றி ரசிகர்களுக்கு உபதேசிக்கிறார்.

இடைவேளை வரை தலைவனைத் தவறாகப் புரிந்துகொண்டு வெறுத்த தலைவியானவள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தலைவனிடம் சரணடையும் நேரத்தில் அவர்களைப் பிரித்துவிடும், கொடுமையே உருவான நம்பியார்தான் காஷ்மீர் போராளிகள். ''காஷ்மீர் தீவிரவாதிகள் பிரச்சினையை ஆழமாக அறியாத தமிழ் மக்களுக்கு'' ஆழமாகவும் அகலமாகவும் இப்படித்தான் விளக்குகிறார் மணிரத்னம்.

சரி, காஷ்மீர் என்பதுதான் என்ன? ஒபராய்க்கு நட்சத்திர ஓட்டல்; இந்திய அரசுக்கு அந்நியச் செலாவணி சுரக்கும் காமதேனு; இந்திய ராணுவத்துக்கு எதிரிகள் நிறைந்த போர்முனை; ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட தேசபக்தர்களுக்கு ஹனிமூன் மையம்; வைரமுத்துவுக்கு 'படகுவிட ஆசை' வரும் இடம்; மணிரத்னத்துக்கு அருமையான அவுட்டோர் லொகேஷன்; காஷ்மீர் மக்களுக்கோ ஆக்கிரமிக்கப்பட்ட தாய் நாடு. இப்படி எழுதுவதற்காக 124-A,B,C,D,E பிரிவுகளில் கைது செய்யப்படுவதாக இருந்தாலும் இதுவே உண்மை.

இந்த வரலாற்று உண்மைக்கு கான்கிரீட் சமாதி - மன்னிக்கவும் - செல்லுலாய்டு சமாதி - கட்டி அதன் மேல்தான் ரோஜாவை வைத்திருக்கிறார் மணிரத்னம். ''ஒரு கலைப்படைப்பில் அரசியல் விவாதமா நடத்தமுடியும்'' என்று 'என்ன இருந்தாலும் மணிரத்னம் - கோஷ்டி' கொதித்தெழலாம். நடத்த வேண்டாம்; ஆனால் யாரோ ஒரு கம்ப்யூட்டர் எஞ்சினியருக்கும் கிராமத்துப் பெண்ணுக்கும் நடக்கும் ஊடல் - கூடலைப் பற்றி டூயட், குரூப் டான்ஸ் சகிதம் விலாவரியாக விவரிக்கும்போது ''காஷ்மீர் தீவிரவாதத்தின் உக்கிரத்தை'' விளக்க முனைந்த மணிரத்னம் அந்த தீவிரவாதிகளின் முகத்தை மூடியதுடன் வாயையும் இருக்கக் கட்டியது ஏன்? அவர்கள் வாயைத்திறந்தால் தேசபக்தி + சென்டிமென்ட் கலவை நொறுங்கிவிடும் என்ற அச்சமா? வாழத்துடிக்கும் காஷ்மீரின் பிஞ்சுகளும் இளைஞர்களும் இந்திய ராணுவத்தின் துப்பாக்கி ரவைக்கு கொத்துக் கொத்தாக பலியாகிவிழ, அவர்களுக்கு என்ன - சின்னச் சின்ன - ஆசையா? திமிரா?

இந்த லட்சணத்தில் படம் ரொம்பவும் 'ரியலிஸ்டிக்காக' இருக்க வேண்டும் என்பதற்காக கடந்த பல ஆண்டுகளில் இது தொடர்பான செய்திகள், கட்டுரைகள், பேட்டிகள் எல்லாவற்றையும் சேகரித்து திரைக்கதை எழுதினார்களாம். உண்மை விளம்பி காந்தி, ரோஜாவின் ராஜா நேரு ஆகியோர் காஷ்மீரில் வாக்கெடுப்பு (Plebiscite) நடத்துவதாகக் கொடுத்த வாக்குறுதிகள், நேரு பரம்பரை தொடர்ந்து செய்த தில்லுமுல்லுகள், இன்றைய ராணுவ அட்டூழியங்கள் - ஆகிய அனைத்தையும் பற்றி முன்னாள் நீதிபதி தார்குண்டே முதல் இன்றைய சாதாரண பத்திரிகையாளர்கள் வரை பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார்களே, இவையெல்லாம் மணிரத்னம் கண்ணில் படவேயில்லை போலும்! அல்லது செய்திகளை தினமலர், ஆர்கனைசர் போன்ற 'தேசபக்த' பத்திரிகைகளிலிருந்து மட்டும் சேகரித்திருக்க வேண்டும்!

காஷ்மீர் போராளிகளைப் படம் முழுவதும் கொலைகாரர்கள் என்று கதாநாயகன் அழைப்பதும், 'வழிதவறிய' இளைஞர்களுக்காக வேதனைப்படுவதும், 'விரட்டப்பட்ட' இந்துக்களுக்காக குமுறுவதும்... ஆகாசவாணி செய்தியறிக்கையே தேவலாம். அயோத்தி விவகாரத்தை சாக்காக வைத்து நாடு முழுவதும் அப்பாவி முஸ்லீம்கள்

படிப்பகம்

www.padippakam.com

நூற்றுக்கணக்கில் கொல்லப்படும்போது அதற்கு பதிலடியாக ஒரே ஒரு இந்துவைக்கூட ''அந்த காஷ்மீர் கொலைகாரர்கள்'' கொல்லவில்லையே ஏன்? அதுவும் குடும்பம், சொந்தம், பாசம், அன்பு எதுவும் இல்லாத, தூங்கும் நேரம்போக மீதி நேரத்திலெல்லாம் கண்களில் கொலைவெறியை மட்டுமே காட்டும் பயங்கரவாதிகள்!

சிறையிலிருக்கும் பயங்கரவாதி வாசிம்கானை நேரில் பார்த்து தன் கணவனின் விடுதலைக்காக வாதாடுகிறாள் ரோஜா. ''இருவரும் வெவ்வேறு மொழிகளில்தான் பேசுகிறார்கள். ஆனால் அந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடு - கிளாசிக்!'' என்று மெய்சிலிர்க்கிறார் தயாரிப்பாளர் பாலசந்தர். பாலசந்தர் அவர்களே. அந்த இடத்தில் 'கிளாசிக்'கான விசயம் உணர்ச்சிகளின் வெளிப்பாடு அல்ல; தமிழ் தெரிந்த போராளியை ஊமையாக்கிவிட்டு தமிழ் தெரியாத வாசிம்கானை சுதந்திரமாகப் பேச விட்டிருக்கும் உங்கள் மணிரத்னத்துடைய நரித்தனத்தின் வெளிப்பாடுதான்! புரியும்படி சொன்னால், மைக்கை அணைத்துவிட்டு பரிதி இளம்வழுதியை பேச அனுமதிக்கும் சேடப்பட்டி போல ஜமாய்த்துவிட்டார் மணிரத்னம்.

அதிருக்கட்டும். மணிரத்னத்தின் தேசபக்தி திருநெல்வேலியில் ஊற்றெடுத்து 3,000 கிலோ மீட்டர் வடக்கே பாய்ந்தது ஏன்? ஏனென்றால் காஷ்மீர்தான் தமிழ் ரசிகர்களுக்கு ரொம்பவும் நெருக்கமாம் (அதாவது டூயட், கனவுக்காட்சி உறவு). அத்துடன் வடக்கே காஷ்மீர் முதல் தெற்கே திருநெல்வேலி வரை இந்தியா ஒரே நாடு என்று சிம்பாலிக்காக சொல்ல விரும்பினாராம். இன்னும் கொஞ்சம் தெற்கே போய் விவேகானந்தர் பாறையிலிருந்து தொடங்கியிருந்தால் முரளி மனோகர் ஜோஷி மேலும் சந்தோஷப்பட்டிருப்பார். இனி அடுத்த படத்தில் மேற்கே குஜராத்திலிருந்து கிழக்கே அஸ்ஸாம் வரை ஒரே நாடு என்று மணிரத்னம் சிம்பாலிக்காகச் சொல்வார்: ஒரு குஜராத்தி பனியாவை (பனியாவை எவன் பார்ப்பது? தேன் எங்கே? பனியாவின் அழகான பெண்ணை) உல்பா தீவிரவாதிகள் கடத்துவதுபோல பாலகுமாரனை வைத்து கதை பண்ணச் சொன்னால் போயிற்று.

ஆனால் காஷ்மீரைத் தேர்ந்தெடுக்க வேறு முக்கியமான காரணமும் இருக்கிறதே. காஷ்மீர் போராளிகள் முஸ்லீம்கள்; மேலும், பாகிஸ்தான் எதிர்ப்பில்தான் இந்திய தேச பக்தியின் கற்பு நிரூபிக்கப்பட வேண்டும். இது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை. இவ்வாறு குற்றம் சாட்டுவது அபாண்டமென்றும் அதீதமென்றும் கருதுவோருக்கு படத்திலிருந்து ஒரேயொரு விளக்கம்.

கதாநாயகனை போராளிகள் அடித்துத் துவைக்கிறார்கள் - அருகே போராளிகளின் தலைவன் மிகவும் அமைதியாக நமாஸ் செய்து கொண்டிருக்கிறான். 'மணிரத்னம் டச்' என்று பீற்றுகிறார்களே, அப்படியொன்று இருந்தால் அதுதான் இது. இந்தக்காட்சி ''பிரிவினைவாதத்திற்கெதிரான'' விமரிசனம் அல்ல. இஸ்லாமிய மதத்தின் மீதான தாக்குதல்; ரத்தவெறிபிடித்த தாக்குதல் ஒன்று அருகிலேயே நடக்கும்போது சஞ்சலமற்று இரக்கமற்று தொழுகை நடத்தும் மதம்; 'புனிதமான' கோயிலின் வாசலில் மனைவியிடமிருந்து கணவனைப் பிரித்தெடுக்கும் மதம்; தேசியக் கொடியைக் கொளுத்தும் மதம்.

''அருவி - எலுமிச்சை - புத்துணர்ச்சி - லிரில்'' என்ற சோப்பு விளம்பரத்தின் படிமத் தந்திரத்தில் வசனம், விளக்கம் எப்படித் தேவையில்லையோ அப்படித்தான் இந்தக் காட்சிகளிலும் வசனம் தேவையில்லை. படம் பார்த்த ரசிகனின் மனதில் வசனங்கள் பதிகிறதோ இல்லையோ, இந்த ''சொல்லாத சொல்'' நிச்சயம் பதியும் என்பது 'சோப்பு வியாபாரி' மணிரத்னத்துக்கு தெரியும்.

இன்னொரு காட்சி. போராளிகள் இந்திய தேசியக் கொடியைக் கொளுத்துகிறார்கள். நமத்துப்போயிருந்த கதாநாயகனின் தேசப்க்தியும் உடனே பற்றிக் கொண்டு கொழுந்துவிட்டெறிகிறது. உடனே கொடிமீது விழுந்து புரண்டு தீயை அணைக்கிறான். போராளிகள் அவனை நையப்புடைக்கிறார்கள். பின்னணியில் பாடல் ஒலிக்கிறது ''தமிழா... தமிழா நாளை உன் நாளே...'' இதைவிட மோசமான கயமைத்தனத்தையும் நயவஞ்சகத்தையும் உலகெங்கும் தேடினாலும் காணமுடியாது. கொளுத்தியது இந்தியக் கொடியை; அவன் விழுந்து தடுக்கக் காரணம் இந்தியன் எனும் உணர்வு; பாடலில் மட்டும் தமிழனைக் கூப்பிடுகிறார் வைரமுத்து. இந்த ஐந்தாம்படை வேலையை எதிரியைக் காட்டிலும் துரோகியால் மட்டுமே செவ்வனே செய்ய முடியும் போலும்! அதாவது காஷ்மீர் தீவிரவாதி (கொலைகாரன், முஸ்லீம், பாகிஸ்தான் கைக்கூலி) தமிழனை அடிக்கிறானாம். எப்படி பிரித்தாளும் சூழ்ச்சி!

இந்திய மாநிலங்கள் தனி நாடுகளாகப் பிரிந்துபோனாலும் நாம் அதிர்ச்சியோ, கவலையோ கொள்ளக்கூடாது என்றும் அது தவிர்க்கவியலாத வரலாற்று நியதி என்றும் 'குங்குமம்' இதழில் எழுதிய சுஜாதாதான் இதற்கு வசனகர்த்தா. அறிவு நாணயம்? மூச். பேசக்கூடாது. ரூபாய் 'நாணயம்'தான் பார்க்க வேண்டும். ஆயிரம் கொடுத்தால் 'சேலை-சோலை' என்று பசுமையாகவும், இரண்டாயிரம் கொடுத்தால் 'ரத்தம் - புரட்சி' என்று சிவப்பாகவும் எழுதத் தெரிந்த வைரமுத்துதான் பாடலாசிரியர். வியாபாரப் படிப்பில் முதுநிலைப் பட்டம் பெற்ற கைதேர்ந்த வியாபாரி மனிரத்தினம் இயக்குனர். வியாபார நுணுக்கத்துக்கு கேட்க வேண்டுமா?

மொழி தெரியாவிட்டாலும் உணர்ச்சிகளைப் புரிந்து ரோஜாவின் கோரிக்கையை ஏற்கிறாராம் மத்திய அமைச்சர். நமக்குத் தெரிந்தவரை அமைச்சர்களிடம் புரிந்த மொழியில் பேசினாலே காதில் விழுவதில்லை; உணர்ச்சி பொங்க கத்தினாலோ உதைதான் விழுகிறது. இந்த 'உணர்ச்சியமயமான' காட்சி அவார்டு தேடும் காக்காய்.

பாலியல் உறவை நிகழ்த்திக் காட்டும் 'ஆர்கி' பாணியிலான நடனத்தை 70 வயது கிழவிகள் ஆடுகிறார்கள். கேட்டால் 'படிக்கக்கூடாத ஜோக்' மாதிரி இதை ரசிக்கச் சொல்கிறார் மணிரத்னம். அடுத்த படத்தில் மடிசார் மாமிகளை இப்படி ஆடவிடுவாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

தன்னுடைய முழு அறிவையும் பயன்படுத்தி படமெடுத்தால் தற்போதைய ரசிகர்களில் பாதிப்பேரை இழந்து விடுவேன் என்று அச்சம் தெரிவிக்கிறார் மணிரத்னம். அவர் தொடர்ந்து பாதி அறிவையே பயன்படுத்தட்டும். முழு அறிவையும் பயன்படுத்தினால் நமக்கு விமரிசனப் புத்தகம் போட வசதி இல்லை.

ஒளிப்பதிவு, இசை ஆகியவற்றைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறாமல் என்னய்யா விமரிசனம் என்று கலா ரசிகர்கள் கோபிக்கலாம். ரகுமான் விளம்பர ஜாடிக்கேற்ற விளம்பர மூடி. சந்தோஷ் சிவன் போர்ஜரி பேர்வழி கையில் கிடைத்த அற்புதமான பேனா. ஒளிப்பதிவு, இசை குறித்து எழுத விஷயங்கள் உண்டெனினும் பக்கங்கள் இல்லை; விருப்பமும் இல்லை. கடிக்க வரும் பாம்பின் அழகையும் ரசிக்குமளவுக்கு அழகியல் ஞானம் எனக்கு இன்னும் கைவரவில்லை.

மொத்தத்தில் படத்தைப் பற்றி ஒரு பெண் வாசகர் ஆனந்த விகடனில் அழகாகச் சொல்லியிருப்பதையே மேற்கோள் காட்ட விரும்புகிறேன்: ''டாகுமென்டரியாக வரவேண்டிய ஒரு சப்ஜெக்டை ரசிக்கும்படி சினிமாவாகக் கொண்டுவர மணிரத்னத்தால்தான் முடியும்.'' ஒரு சிறிய திருத்தம். விசுவாலேயும் முடியும்.

தேர்ச்சிநயமிக்க முறையில் சமகால பயங்கரவாதத்தை எதிர்த்து படம் எடுக்கும் மணிரத்னம் இனி, ஒமர் முக்தார், பகத்சிங், ஹோ-சி-மின் போன்ற கொடிய பயங்கரவாதிகளுக்கெதிராகவும் படமெடுத்து நமது வரலாற்று அறிவை செம்மைப்படுத்த வேண்டும். இந்த கிழக்கத்திய 'ஜீனியஸ்'ஸைப் பற்றி சி.ஐ.ஏ-வுக்கு சுப்பிரமணியசாமி தகவல் அனுப்பினால் 'ராம்போ' பாணியில் காட்டுத்தனமாகப் படம் எடுக்காமல் 'ரோஜா'வைப் போல மென்மையாக நாகுக்காக மணிரத்னம் படமெடுத்துத் தருவார். அத்வானியின் அகண்ட பாரத ஒருமைப்பாட்டிலிருந்து அமெரிக்காவின் உலக ஒருமைப்பாட்டுக்கு ஒரே தாவாக தாவி விடலாம்.

☆ சூரியன்

*குறிப்பு:* இக்கட்டுரையில் ஒற்றை மேற்கோள்களுக்குள் குறிப்பிடப்பட்டுள்ளவை 'ரோஜா' குறித்து கல்கி (13.9.92), ஆனந்தவிகடன் 20/9, 27/9 இதழ்களுக்கு மணிரத்னம் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளவை.

**ரோஜாவை தடைசெய்! ஆர்ப்பாட்டம்!!**

*காஷ்மீர் மக்களின் உரிமைக்கெதிராகவும், இஸ்லாமிய எதிர்ப்பு இந்து மதவெறியைத் தூண்டும் வகையிலும் எடுக்கப்பட்டிருக்கும் ரோஜா படத்தைக் கண்டித்து 16.8.92 அன்று ம.க.இ.க. சார்பில் கொடுக்கப்பட்ட பத்திரிகை செய்தியை தினப்புரட்சி தவிர பிற நாளேடுகள் பிரசுரிக்கவில்லை. தமிழகமெங்கும் இப்படத்தைத் தடை செய்யக் கோரி சுவரொட்டி இயக்கமும், திருச்சியில் திரையரங்கின் முன் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.*

படிப்பகம்

www.padippakam.com




## பகையை வளர்க்கப் பெயர் மாற்றம்

தலையை நுழைக்க இடம் கொடுத்தால் கூடாரத்தையே ஆக்கிரமித்துக் கொள்ளும் ஒட்டகம் என்பார்கள். அதுபோல கிடைத்திருக்கும் மாநில ஆட்சியைப் பயன்படுத்துகிறார்கள் இந்துமதவெறி பாசிச பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள். உத்திரப்பிரதேச பள்ளிப் பாடப்புத்தகத்தில் வரலாற்றையே திருத்தி எழுதி பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சு கலந்தார்கள். இப்போது நாட்டின் வரலாற்றையே திருத்தி எழுதும் வேலையைத் துவக்கியுள்ளனர். உ.பி.யின் மாநகரங்கள், நகரங்களின் பெயர்களை மாற்றி எழுதப் போகிறார்களாம். கடந்த ஆண்டு ரிசிகேசத்தில் கூடிய விசுவ இந்து பரிசத், ஃபைசாபாத்தை அயோத்தி என்றும், அயோத்தியை சாக்கேத் என்றும், லக்னோவை லட்சுமணபுரம் என்றும் அலகாபாத்தை பிரயாகை என்றும் பெயர் மாற்றும்படி தீர்மானம் நிறைவேற்றியது. அதை ஏற்றுக்கொண்ட உ.பி. பாரதீய ஜனதா மந்திரி சபை மேலும் சில முடிவுகள் எடுத்தது. அதன்படி மொகல்சராய் நகரை தீனதயாள் நகர் எனப்பெயர் மாற்றும்படி மத்திய அரசைக் கோரியது. யார் இந்த தீனதயாள்? பாரதீய ஜனதாவின் முந்தைய அவதாரமாகிய ஜனசங்கின் தலைவர். இவர் இதே மொகல்சராய் ரயில் சந்திப்பில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அதை நினைவு கூறவும், ''மொகல் சராய் நகரில் மொகலாயக் குடியிருப்பு எதுவும் இருந்ததாக வரலாறு இல்லை'' என்ற காரணத்தினாலும் இந்த பெயர் மாற்றமாம். ''மொகலாய ஆட்சியால் நேர்ந்த தேசிய அவமானச் சின்னங்களை அழிப்பது'' என்கிற பெயரில் அது தொடர்ந்து நடத்தும் இசுலாமிய சிறுபான்மை எதிர்ப்பு இந்து மத வெறி பாசிச இயக்கத்தின் ஒரு பகுதிதான் இந்தப் பெயர் மாற்ற முயற்சி.

## 'ஜனநாயக'க் குஞ்சின் ஊதாரித்தனம்

மேற்கத்திய நாகரிகம் பொங்கிவழியும் இடம் நியூயார்க் நகரில் உள்ள மாடிசான் அவின்யு. அங்கு நுழைந்து ஒரு சிறு செலவு செய்வதைக் கூட நடுத்தர அமெரிக்கன் கனவுகாண முடியாது. அதாவது கோடீசுவரர்களின் சொர்க்கம். அங்குள்ள சிகையலங்கார நிபுணர் ஆண்ட்ரூ. இவர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஆஃப்ரிக்க நாடான ஜையர் தலைநகர் கின்ஷாசாவுக்குப் பறந்துபோய் அந்நாட்டு அரசுத் தலைவர் மொபுட்டு செசெ செகோவுக்குச் சிகையலங்காரம் செய்து விட்டுத் திரும்புகிறார் ஆண்ட்ரூ. முதல் வகுப்பு விமானப் பயணம், அந்நாட்டிலேயே மிக உயர்ந்த ஐந்து நட்சத்திர ''இண்டர் - காண்டினன்டல் ஓட்டலில்'' தங்குவது உட்பட ஒருமுறை அதிபருக்கு சிகை அலங்காரம் செய்வதற்கு மட்டும் குறைந்தது 5,000 டாலர்கள் (இன்றைய மதிப்பில் 1,50,000 ரூபாய்) செலவாகிறதாம். கடந்த எட்டு ஆண்டுகளாக இப்படி நடக்கிறது.

அதே சமயம் எத்தியோப்பியா, சூடான், சோமாலியா என்று பரவும் பஞ்சம் - பட்டினிச் சாவுகள், கொள்ளைநோய்கள் இந்தச் ஜையர் நாட்டையும் தொட்டுவிட்டது. 27 ஆண்டுகளாய் இந்த பாசிச சர்வாதிகாரி மொபுட்டுவின் பிடியில் சிக்கித் திணறுகிறது ஜையர். ஒவ்வொரு நாள் நள்ளிரவிலும் ''நெம்பர்'' குறியிடாத மோட்டார் வண்டிகளில், சின்னம் பொறிக்காத காக்கி உடையில் கொடூர ஆசாமிகள் தலைநகரத் தெருக்களில் வந்து இறங்குகிறார்கள். நகரவாசிகள் அவர்களை ''ஆந்தை மனிதர்கள்'' என்றழைக்கின்றனர். மார்ஷல் மொபுட்டுவின் 'சிறப்பு அதிபர் காவல் படையினர்', அரசியல் எதிரிகள் எனச் சந்தேகிக்கும் அனைவரையும் பயங்கரமாகத் தாக்கிச் சூறையாடி விட்டுப் போகிறார்கள். ''மொபுட்டு மட்டும் சாதாரண முறையில் நகருக்குள் வந்தானேயானால் உயிரோடு திரும்புவது சந்தேகந்தான்'' என்று கின்ஷாசா மக்கள் ஆத்திரத்தோடு குமுறுகின்றனர்.

தேச பக்தன் பாட்ரீஸ் லுமும்பாவை சி.ஐ.ஏ. ஏஜெண்டுகளை ஏவி படுகொலை செய்த ஏகாதிபத்தியம் நிறுவியுள்ள ''சுதந்திர, ஜனநாயக ஆட்சி''யின் சின்னத்தைப் பார்த்தீர்களா!

## மலம் அள்ளுகிறார்கள் பார்ப்பனர்கள்!

சமஸ்கிருதத்தில் முதுகலை ஆங்கிலம் கற்றவர் பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்ற முடியுமா? முடியும் - சாதிவெறியும் அதிகார முறைகேடும் இருந்தால்! பீகாரில் ஒரு சமஸ்கிருதப் பல்கலைக் கழகம்(!) முழுக்கவும் பார்ப்பனர்களால் நிரப்பப்பட்டுள்ளது. சமஸ்கிருதம் தொடர்பான துறைகளில்தான் என்றில்லை. ஆங்கில விரிவுரையாளர் பணிகளுக்கும் தமது சாதிக்காரர்களையே நியமிக்க முடிவு செய்தார் காங்கிரசின் முன்னாள் முதல்வர் ஜெகன்னாத மிஸ்ரா. இந்த ஆண்டு அப்பல்கலைக் கழகத் தணிக்கையின் போதுதான் இந்த அதிகாரமுறைகேடு நடந்துள்ளது தெரிய வந்தது. பதவி மோகமும் சாதிவெறியும் இப்படிச் செய்ய வைத்துள்ளது. இதற்காக மேலும் பல இழிசெயல்களை அவர்கள் செய்துள்ளதும் தெரிய வந்தது. 300 பார்ப்பனர்களை மலம் அள்ளும் துப்புரவுப் பணியாளர்களாகவும் அந்த முதல்மந்திரி நியமித்துள்ளார். பார்ப்பனர்கள் மலம் அள்ளுவதா? இல்லை மாதம் 1,200 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொள்வதற்காக மட்டும் இந்த மோசடி நடந்தது.

## தொடர்கிறது பெண் சிசுக் கொலை

மதுரை - உசிலைப் பகுதியில் பெண்குழந்தைகளைப் பிறந்தவுடன் கொலை செய்யும் அதிர்ச்சியூட்டும் வழக்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்தது. ஆனால் அது அந்தப் பகுதியில் மட்டும் நிலவும் வழக்கமல்ல, தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக நடந்து வருவதுதான் என்று இப்போது தெரிகிறது. சேலம் மாவட்டத்தின் ஐந்து வட்டாரங்களை எடுத்துக் கொண்டு 1,250 குடும்பங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டன. அவற்றில் 740 குடும்பங்களில் ஒரே ஒரு பெண் குழந்தைதான் உயிரோடு உள்ளது. ஒன்றுக்கு மேலே போனால் பிறந்த ஒருவாரத்துக்குள் பாலிலோ, சுடு தண்ணீரிலோ நெல்லைச் சேர்த்துப் புகட்டி, ரத்த வாந்தி எடுக்கவைத்தோ அல்லது அரளி, எருக்கம்பால் போன்ற நாட்டு விஷத்தைப் புகட்டியோ கொன்றுவிடுகிறார்கள். கவுண்டர்கள், வன்னியர்கள், நாய்க்கர்கள், நாடார்கள், தேவர்கள் மட்டுமல்ல லம்பாடிகள், மலையாளிகள் முதலிய ஆதிவாசிகள் கூட இப்படிச் செய்கின்றனர். பாலிடால் போன்ற பூச்சி மருந்துகூட பயன்படுத்துவது உண்டு. மூச்சுவிட முடியாமல் மூக்கையும் வாயையும் மூடியும் போர்வை, தலையணையால் முகத்தை அமுக்கியும், குளிர்காலத்தில் வெளியில் வீசி எறிந்தும் கொடூரமாகக் கொன்றுவிடும் பழக்கங்களும் உண்டு. வறுமை என்பதைவிட பெண்ணை வளர்ப்பதும் வரதட்சிணை தருவதும் முடியாத காரியம் என்பதால் இந்தப் பெண்கொலை கொடுமைகள் நடக்கின்றன. அந்தப் பகுதி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு கருத்தரங்கம் நடத்த இரண்டு தன்னார்வக் குழுக்கள் திட்டமிட்டிருந்தன. ஆனால்

தொடர்ச்சி 23ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.No. 42647/85 Regd.No.TN/MS(S)376

# தமிழகத்தைத் துண்டாட குஷ்பு சதி!

**ஜெயபாரதம்**

**அயோத்தியில் ராமனுக்கு** **ஆலயம் அமைப்போம்**

பூஜ்ய ஸ்ரீ அஷோக் ஷிங்கால்ஜி அவர்களின் சமூகத்திற்கு
ராமஸ்வாமியின் பணிவான விக்ஞாபனம்:

ஸ்ரீராம பாதுகா ஊர்வலம் பற்றிய செய்தியைப் பார்த்தேன். ஸ்ரீராமனின் ஜென்மபூமியைக் கண்டு பிடித்தது டன், பரதன் பாதுகையைப் பெற்ற மரத்தடியையும் நீங்கள் கண்டு பிடித்து விட்டது பற்றி ரொம்ப ஸந்தோஷம். இந்த மரத்தடியை முஸல்மான்கள் எப்படி விட்டு வைத்ததார்கள் என்பதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது. போகட்டும். இங்கே தமிழ்நாட்டில் நம்மவா ஆட்சிதான் என்றாலும் அவ்வப்போது மனக்கிலேசத்தை உண்டு பண்ணக்கூடிய கார்யங்கள் நடக்காமலில்லை. நேரடியாக விஷயத்துக்கு வருகிறேன்.

ஸமீபத்தில் மதருஸ் 'குமரன் சில்க்ஸ்' கடையில் என் பெண்ணுக்கு பட்டுப்புடவை வாங்கப் போயிருந் தேன். இந்த வருஷ தீபாவளிக்கு அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கும் புடவைக்கு **'குஷ்பு சேலை'** என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இதைக் கேட்டவுடன் நான் கடையைவிட்டு வெளியில் வந்துவிட்டேன். கடை முதலாளியும் ஹிந்துதான் என்பதை சொல்லத்தேவையில்லை. இங்கே திரும்பின இடமெல்லாம் குஷ்பு வளையல், குஷ்பு பொட்டு. பொட்டுக்கும் குஷ்புவுக்கும் என்ன ஸம்பந்தம் ? கேட்க சகிக்கவில்லை. அதிகம் சொல்வானேன். பள்ளிக்கூடத்தில் படிக்கும் என் கடைசிப் பையன்கூட நோட்டுப் புஸ்தகத்துக்குள் இந்தப் பிசாசின் படத்தை ஒட்டி வைத்திருக்கிறான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இந்த குஷ்பு என்பவள் தமிழ் சினிமாவில் இன்றைக்கு நம்பர் ஒன் நடிகை. இருந்து விட்டுப் போகட்டுமே என்று அலட்சியம் பண்ணி விடாதீர்கள். **அவள் ஒரு முஸ்லீம்.** அவளுடைய உண்மைப் பெயர் நக்கத். பம்பாய்க்காரியாம். இந்துவா முஸ்லீமா என்று கண்டு பிடிக்க முடியாதபடி குஷ்பு என்று வேண்டுமென்றே ஈரெட்டாக தன் பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறாள். இந்த விஷயத்தையே நான் தற்செயலாக ஒரு சினிமா பத்திரிகையைப்பார்த்துதான் தெரிந்துகொண்டேன். 'ஹிந்துவே விழிப்புணர்வுகொள்' என்று சொல்லிக்கொண்டு நம் பத்திரிகைகள் தூங்கு கின்றன.

ஹிந்து சமுதாயத்துக்கு ஏன்தான் இப்படி புத்திகெட்டுப் போனதோ தெரியவில்லை. விநாயகர் சதுர்த்தி பந்தலில் 'கூந்தலிலே என்ன பூ குஷ்பு'ன்னு மைக்செட்டில் பாட்டு போட்டு போடறான் ஒரு சேரி ஹிந்து. ஹிந்து சமூகத்தில் பிளவு உண்டாகிவிடப் போகிறதே என்று ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு பேசாமல் வந்தேன். நம்மவாளே சினிமாவில் இப்படி பாட்டு போடும்போது நாம் அவனை எப்படி கேட்க முடியும் ? பாலசந்தர், மணிரத்தனம், விசு, ஜீவி இவாளுக்கெல்லாம் நீங்களாவது சொல்ல வேணும். இல்லையானால் ஆசாரிய சுவாமிகளையாவது இதில் தலையிட்டு அவாளுக்கு புத்தி சொல்லச் சொல்லவும். இப்படியெல்லாம் எழுதுவதால் லௌகிக நிலைமை புரியதாவன் என்று என்னை எடைபோட்டு விட வேண்டாம்.

இன்றைக்கு ஸினிமாதான் எல்லாம் என்று ஆனபிறகு நாமும் இறங்கி ஒருகை பார்த்துவிட வேண்டியது தான். இந்த அகண்ட ஹிந்து தேசத்தில் ஹிந்து பெண்களுக்கா பஞ்சம்? நமக்கு பாரம்பர்யம்தான் இல்லையா? ரம்பை, ஊர்வசியென்ன, திலோத்தன்மையென்ன, அப்ஸரஸ் ஸ்திரீகள் என்ன... ஆனானப்பட்ட விஸ்வாமித்ர னையே வழிக்குக் கொண்டுவந்த மேனகை பிறந்த பூமியல்லவா இது. அந்த காலத்தில் ஆலயங்கள் இந்தமாதிரி விஷயங்களுக்கு ரொம்ப பிரயோஜனமாக இருந்தன. இப்போ எல்லாமே ஸினிமா கொட்டகைதான். சிற்பிக ளும் இப்போது சுவாரசியமில்லை.

போன எலக்ஷனில் சத்ருக்னன் சின்ஹா மாதிரி ஹிந்து நடிகர்களை ஈடுபடுத்தியதிலிருந்து நீங்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொண்டிருப்பது தெரிகிறது. இருந்தாலும் லக்ஷணமான ஸ்திரீகள் இல்லாத பக்ஷத்தில் ஹிந்து தர்மத்தின்பால் வாலிபர்களை ஈர்ப்பது கஷ்டம். உமாபாரதியெல்லாம் இதற்கு லாயக்கில்லை. ஜீ.வியி டம் இந்த விஷயத்தை நீங்கள் காதில் போட்டுவிட்டால் போதும். ஆக வேண்டியதை பார்த்துக்கொள்வார்.

ஏதோ ஒரு அலையில் நம்மவா ஆட்சி இங்கே வந்துவிட்டது. ஆனால் அடுத்த தேர்தலில் இந்த ராக்ஷஸி (குஷ்பு) போட்டி போட்டால் நிலைமை என்ன ஆகும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. எனக்கு இன்னொரு ஸம்சயமும் உண்டு. தமிழ்நாட்டைத் துண்டாட பாகிஸ்தான் நடத்தும் சதியாகவும் இது இருக்கலாம். வடக்கே காஷ்மீரில் ஏ.கே. 47 ஐக் கொடுப்பவன், தெற்கே மோகனாஸ்திரத்தை ஏவுகிறான். இதில் கருணாநிதியும் உள்கையாக இருக்கலாம். எதற்கும் நீங்கள் பிரதமர் காதில் இதைப் போட்டுவைக்கவும்.

ராமஜன் பூமி விஷயமே இன்னும் முடியாத போது இப்போதைக்கு இதை பெரிய விஷயமாக கிளப்புவது நமது கக்ஷிக்கு உசிதமில்லை. தமிழ்நாட்டுக்கு கோவிந்தாசார்யாவை அனுப்பியிருக்கிறீர்கள். விஷயத்தை அவரிடம் விட்டுவிட்டால் பிரமாதமாக கவனித்துவிடுவார். குறைந்த பக்ஷம் ஹிந்து தயாரிப்பாளர்கள் ஹிந்து நடிகைகளைப் போட்டு படம் எடுக்க வேண்டும் என்று பிரச்சாரத்தைக் கிளப்பினாலே இந்த சனியனை சீக்கிரம் ஒழித்து விடலாம். எப்படியோ இந்த முஸல்மான் மோகினியிடமிருந்து ஹிந்து தர்மத்தைக் காப்பாற்ற பகவான் அருள் பாலிக்கட்டும். ஜெய் சியாராம்.

அனந்தகோடி நமஸ்காரங்களுடன்
ராமஸ்வாமி (ஐயர்)

பின் குறிப்பு: ஸ்ரீராம பாதுகா ஊர்வலம் பற்றிய செய்தியை இண்டியன் எக்ஸ்பிரஸ் 10-ம் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். தலைப்பு செய்தியாகப் போடாவிட்டாலும் முதல் பக்கத்திலாவது போடக்கூடாதா? பாதுகையை 'ஸ்லிப்பர்'னு இங்கிலீஷில் மொழி பெயர்த்து எழுதறாள். இதெல்லாம் ரொம்ப அநியாயம். சம்பந்தப்பட்டவாளிடம் சொல்லி கவனிக்கச் சொல்லவும்.

## அசோக் சிங்காலுக்கு ஒரு அவசரக் கடிதம்



படிப்பகம்